# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, மார்கழி 17 உ (31-12-72) ஞாயிறு ஜுலைகை 24 | புத்தகம் 26 இதழ் 4


## நாவலர் பெயரின் பின்னால் நடக்கின்ற சூழ்ச்சி காணீர்!

### தலைமைச் செயலாளர் விளக்கம்!

18-12-72 அன்று கலாச்சார அமைச்சர் பங்குபற்றிய வைபவம் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. நாவலர் சபையினால் அல்ல என்பதைப் பொது மக்களில் பலர் அறியாதிருக்கின்றனர். தமிழருக்கும் பெளத்தரல்லாத மதங்களுக்கும் உரிமை மறுக்கும் அரசின் அமைச்சர் கலந்து கொள்ளும் விழாவென்ற முறையில் அதைப் பகிஷ்கரிக்குமாறு தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு மக்களைக் கோரியது. எக்கூட்டத்திலும் அங்கு கறுப்புக்கொடி காட்டவோ வேறு ஆர்ப்பாட்டம் நடத்தவோ கூட்டணி தீர்மானிக்கவில்லை.

இத்தீர்மானம் பற்றிப் பொறுப்பு வாய்ந்த சைவ பரிபாலன சபைத் தலைவரும் பொறுப்பற்ற வேறு சிலரும் வெளியிட்ட அறிக்கைகளும் துண்டுப் பிரசுரங்களும் தமிழ் மக்களிடையே மதப்பூசலைத் தூண்டும் தன்மை வாய்ந்தவையாக இருப்பதால் இத்திருத்தம் தேவையாகின்றது.

அந்த வைபவத்தைப் பகிஷ்கரிக்கும் முடிவு எடுக்கப்பட்ட கூட்டணி நடவடிக்கைக்குழுக் கூட்டத்தின் ஆரம்பத்தில் திரு. நேசையா தலைமை தாங்கினாராயினும் அவர் சென்றபின் பண்டிதர் கா. பொ. [illegible]ரத்தினம்

(7-ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆரும் சுதந்திரனும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆருக்கு சுதந்திரன் எதிரானதா? இப்படியொரு கேள்வியை சுதந்திரனை நோக்கிப் பல வாசகநேயர்கள் கேட்டிருக்கிறார்கள். அண்மையில் குயுக்தியார் பகுதியில் எம். ஜி. ஆர். பற்றி [illegible] [illegible] அனித்திருந்த பகுதியொன்றைப் பார்த்து விட்டு எம். ஜி. ஆரின் ஆதரவாளரான சில வாசகர்கள் மனவருத்தத்துடன் நமக்கு எழுதியிருக்கின்றனர்.

நாம் மிகவும் தெளிவாகக் [illegible] [illegible] மக்கள் திலகம் எம். ஜி. ஆர். மீது [illegible] [illegible] [illegible] கொண்டவர்களோ [illegible] இடையேயும் [illegible] தமிழர்களின் மிக [illegible] பர்களின் [illegible] ஒருவர் என்பதை [illegible] தி. மு. கழகத்துக்கும் அவருக்கும் [illegible] ஏற்பட்ட பின்னும், [illegible] ஒளிவு மறைவின்றி சுதந்திரனில் எழுதியிருக்கிறோம்.

எம். ஜி. ஆரின் நேர்மையையோ, அந்த ரங்கசுத்தியையோ கொள்கைப்பிடிப்பையோ நாம் என்றும் குறைத்து மதிப்பிட்டதில்லை. அவரது கொள்கையான இலஞ்ச ஊழல் ஒழிப்புக்கும் நாம் முழுதும் உடன்பாடானவர்களே.

ஆனால் தி. மு. க.வுக்கும் எம். ஜி. ஆருக்கும் ஏற்பட்டுள்ள மோதலினால், தமிழ்நாட்டில் 30, 40 ஆண்டுகளாக வேரூன்றி வளர்ந்துவிட்ட திராவிட இயக்கம்—தன்மானத் தமிழியக்கம்—அழிந்தொழிந்து போய்விடக்கூடாதென்பதுதான் நமது ஒரே நோக்கம்.

எம். ஜி. ஆர். இலஞ்ச ஒழிப்புக்காக எடுக்கும் நடவடிக்கைகள், ''குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரையாக்கும்'' நிலையை ஏற்படுத்திவிடக்கூடாதென்பதே நமது கருத்து!

எம். ஜி. ஆருக்கும் தி. மு. கழகத்துக்கும் ஏற்பட்டுள்ள மோதல்கள் தீர்ந்து இரு பகுதியும் மீண்டும் இணையவேண்டும் என்பதே வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் கருத்தாகும். இந்தக் கருத்தையே நாம் வலியுறுத்தி வருகிறோம்! இது நடந்தாலதான் தமிழினத்துக்கு நல்வாழ்வு கிடைக்கும்!

[illegible] [illegible] தனிப்பட்ட எம். ஜி. ஆர். பக்கமும் [illegible]—த் விடப்பட்ட கருணாநிதி பக்கமுமல்ல—[illegible] உருவாக்கிய இயக்கம் அழிந்துவிடக்கூடாதென்பதே நமது கவலை. இதனை வாசகர்கள் புரிந்து கொள்வார்களாக.

—ஆசிரியர்.

## புத்தாண்டில்

# விடுதலைப் போராட்டம் புதிய சூடு பிடிக்கும்!

## அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி!

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் எதிர்வரும் புத்தாண்டில் புதிய வேகம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உரிமைப் போராட்டத்தை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என்ற கருத்து தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவிடத்தில் காணப்படுகிறது.

இதற்கு முன்னோடியாக, கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழர் கூட்டணியின் போராட்டத் திட்டக்குழு, தமிழ் இலங்கைக்கு வருகைபுரியும் அமைச்சர்களையும் உதவி அமைச்சர்களையும் விழாக்களைப் பகிஷ்கரிப்பதுடன் மட்டுமில்லாது கறுப்புக்கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்றும் நடவடிக்கைக் குழுவுக்கு சிபார்சு செய்துள்ளது.

இது சம்பந்தமாக தமிழர் கூட்டணியின் தலைமைச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:—

1. தமிழினத்தின் உரிமைகள் அரசியல் திட்ட திருத்தத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படும் வரை தமிழ் பிரதேசங்களுக்கு எந்தப் போர்வையிலும் வரும் அமைச்சர்களுடைய வருகையை பகிஷ்கரித்து கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடாத்துவதென்று திட்டக்குழு, நடவடிக்கைக் குழுவுக்கு சிபார்சு செய்யத் தீர்மானித்தது.

2. யாழ் மாநகரசபையின் 23 வட்டாரத்திலும் கூட்டணிக்கிளைகள் அமைப்பதற்கு தீர்மானித்து அதற்கு ஓர் உப குழு நியமிக்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலும் தொகுதிக் கூட்டணிக் கிளை அமைப்பதற்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

3. மலைநாட்டிலுள்ள தோட்டங்கள் சிலவற்றை அரசாங்கம் சுவீகரித்ததினால் பாதிக்கப்பட்ட தமிழ் தொழிலாளர் நிலை குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைப்பீடத்தோடு கலந்து யோசித்து அடுத்த நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஓர் உப குழு நியமிக்கப்பட்டது.

## குமாரசூரியரின் உணர்ச்சி குறைந்தது அப்படித்தானா?

குமாரசூரியர்:- பருத்தித்துறைப் பிரதிநிதிக்கு எனது முகம் பிடிக்காவிட்டால் அவர் எழுதலாம்..........''

துரைரத்தினம்:- ஏன், உங்கள் முகம் கவர்ச்சியாக இருக்கிறதே!

குமாரசூரியர்:- நல்லது, நீங்கள் மற்ற (பெண்) இனத்தவராகஇருந்தால் உங்களுடன் சேர்ந்து வேலைசெய்ய நான் விரும்புவேன்!

வி. என்!- ஓ...அதுதான் நீங்கள் வேலை செய்யும் முறையா?

குமாரசூரியர்:- அந்த மாதிரி வேலைகளில் நீங்கள் அதிகமாக ஈடுபட்டால், உங்கள் உணர்ச்சியை குறைக்கலாம்!

—தேசிய பேரவையில் 26.12.72 நடந்த நிகழ்ச்சி.

## 'தி. மு. கழகத்தின் பிளவை நீக்கிட செல்வாவும் முயல வேண்டும்'

### 'இலண்டன் முரசு' விடுக்கும் கோரிக்கை!

'தமிழக அரசியலில் புயல்' எனும் தலைப்பில் இலண்டன் முரசு (நவம்பர் இதழ்) எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:—

'தமிழகத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழை ஆட்சி மொழியாக்கியது தி. மு. க. தமிழர்களிடம் சாதிப்பாகுபாட்டை ஒழித்து ஹரிஜனங்களை சமுதாயத்தில் முன்னுக்கு கொண்டுவர வழிவகுத்தது தி. மு. க. தமிழகத்தைப் பிச்சைக்காரர்களில்லாத மாநிலமாக ஆக்கிவருவது தி. மு. க. இன்னும் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் செலுத்தவேண்டி செயல்பட்டுவருகின்றது தி. மு. க.

'ஆனால் தற்போது தமிழக அரசியலில் என்றும் இல்லாத புயல் ஒன்று அடித்துள்ளது. ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்பட்டுள்ள பிளவின் பயனாக இன்னொரு தி. மு. கழகம் தோன்றியுள்ளது. கழகத்தின் முக்கிய தூண் போன்று விளங்கிய மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரன், ஆளுங்கட்சியிலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்ணா தி. மு. கழகம் தொடங்கப்பட்டுள்ளது. அண்மையில் எம். ஜி. ஆர். கட்சியிலிருந்து விலக்

(7ம் பக்கம் பார்க்க)

## • குமாரசூரியர் — ஈழத்து ஆகாகான்'!

'பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவின் பிரதிநிதியாக முன்பொரு முறை ஆகாகானை ஐ. நா. சபையில் நியமித்திருந்தார்கள். ஆகாகான் இந்திய உபகண்டத்தின் நிலைமை பற்றி துளியும் அறியாதவர் எனவே ஆகாகான் நியமனம் பொருத்த மற்றதாக இருந்தது.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக தபாலமைச்சர் குமாரசூரியரை அரசு நியமித்துள்ளதும், ஆகாகானை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நியமித்ததுபோன்று பொருத்தமில்லாததுதான்;

—தேசிய பேரவையில் உடுவில் பா. உ.

## • மூதறிஞர் மறைவுக்கு தமிழர் கூட்டணி இரங்கல்!

மூதறிஞர் ராஜாஜியின் மறைவு குறித்து தமிழர் கூட்டணியின் சார்பிலும், இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் சார்பிலும் இரங்கற் செய்திகளை தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா, தமிழர் கூட்டணித் தலைமைச் செயலாளர் அமிர்தலிங்கம், தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் திரு சி. கதிரவேற்பிள்ளை ஆகியோர் ராஜாஜியின் மகனை திரு. சி. ஆர். நரசிம்மனுக்கு தந்தி மூலம் அனுப்பியுள்ளனர்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 31.12.72 மாலை ராஜாஜி மறைவு குறித்து இரங்கற் கூட்டமொன்றை நடத்தவும் தமிழர் கூட்டணி ஏற்பாடுகள் செய்துவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முரளி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

கே: யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவிருக்கும் உலகத் தமிழ் மாநாடு ஆங்கிலத்தில் நடக்கவிருப்பதாக சுதந்திரனில் செய்தி வெளி வந்ததே? அது எந்த அளவில்?

ப: ஆங்கிலத்தில் நடத்துவது என்ற முடிவு இன்னும் மாற்றப்படவில்லை!

கே: காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தந்தை செல்வாவை எதிர்த்துப் போட்டியிட யாரும் முன் வராததன் காரணம் யாது?

ப: தமிழ் மக்களிடையே உள்ள அரசியல் விழிப்புணர்ச்சிதான்!

கே: உடுவில் எம். பி. தர்மலிங்கம் வைத்திருக்கும் காரில் தமிழ் ஸ்ரீ நம்பர்த்தகடு இருக்கிறது. பின்பு ஏன் சிங்களச் சிறீயை விட்டு வைத்திருப்பது?

ப: தமிழ் மக்களுக்கு சுயாட்சி கிடைக்கும்போது சிங்களம் ஒழிக்கப்பட்டு தனித் தமிழ் இடம் பெறும்!

ஃ

கே. ரீ. செல்வராணி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ் மக்களாகிய நாம் நம்முரிமைக்காகப் போராடும் இவ்வேளையில், தமிழையே புதைக்கக் குழி தோண்டுபவர்களைப் பற்றிய உமது எண்ணம்...?

ப: தங்களுக்கு தாங்களே குழிதோண்டும் புத்திசாலிகள் இவர்கள்!

கே: கவிஞர் கண்ணதாசன் ஈழம் வாழ் தமிழ் மக்களின் துயர் துடைக்க தேர்தலில் போட்டியிடுவதாக கூறியிருக்கின்றாரே நம்பலாமா? அதுபற்றி உமது கருத்து?

ப: கண்ணதாசன் குழந்தை மனம் படைத்தவர். குழந்தை இப்போது ஒன்று சொல்லும் — அடுத்த நிமிடம் அதற்கு விரோதமாகப் பேசும். கண்ணதாசனும் அப்படிப்பட்டவர் தான். ஆனாலும் கடந்த பல ஆண்டுகளாக ஈழத்தமிழர்களின் மீது கண்ணதாசனுக்குப் பற்றும் பாசமும் உண்டு என்பது மட்டும் உண்மை!

தமிழ் மறவன்,
84 திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.

கே: 10-12-72 சுதந்திரன் பத்திரிகையில் 'கேட்டுப் பாருங்கள்' என்ற பகுதியில் கா. நாபவரன் மட்டுவில் வடக்கு, என்ற நண்பர் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். (எம். ஜி. ஆர். அண்ணா தி. மு. க. தொடங்கியதேன்?) இதற்கு ஏன் என்பது இன்னும் அவருக்கே புரியவில்லை என்று பதில் கொடுத்திருக்கிறீர்களே அப்படியானால் நீங்கள் 'தமிழ் அரசு' கட்சியின் தொண்டனாக இருப்பீர்களேயானால் நான் கேட்கும் அதாவது (தந்தை செல்வா 'தமிழ் அரசு' தொடங்கியதேன்?) இதற்கு உங்களால் பதில் தர முடியுமா?

ப: தமிழ் இலங்கையில் தமிழ் அரசு ஒன்றை நிறுவும் இலட்சியத்துக்குப் போராடுவதற்கு தமிழரசுக் கட்சி தொடங்கியது. அப்படி திட்டவட்டமான அண்ணாவால் தொடங்கப்பட்ட தி. மு. கழகத்திலிருந்து வேறுபட்ட — கொள்கை இலட்சியம் எதையும் எம். ஜி. ஆர் இதுவரை மக்கள் முன் வைக்கவில்லையே! ஊழல் ஒழிப்புக்கு என்று தனியே ஒரு அரசியல் கட்சி தேவைதானா?

ஃ

க. சிவநேசன்,
கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

கே: தற்போது தந்தை செல்வா திரு. தொண்டமான் போன்ற இன்னும் பல மதிப்பு வாய்ந்த எதையும் சாதிக்கக்கூடிய பெரும் தலைவர்கள் இருந்தும் கடந்த 6 மாத காலமாகச் சிறையில் வாடும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனையும் அவரோடுள்ள ஏனையோரையும் மீட்க முடியவில்லையே. எந்தக் காலத்தில் தமிழர் தமது உரிமைக்காக அறப்போர் செய்யும் போது தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட்டால், இளைஞர்களால் என்ன செய்ய முடியும்? இதே வேளையில் இளைஞர்களும் கைது செய்யப்பட்டால் யார் கேட்பது? இப்போது சிறையில் வாடுவோரைப் போன்ற நிலை தானே ஏனையோருக்கும்? தயவு செய்து இதுபற்றி சிறு விளக்கம் கூறுவீர்களா?

ப: விடுதலைப் போராட்டங்களில் சிறை செல்வது தவிர்க்க முடியாதது. வங்க தேச விடுதலைப் போராட்டத்தின்போது ஷேக் முஜிபுர் ரகுமான் பல ஆண்டுகளாக தடுப்புக் காவல் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அதேபோல காஷ்மீர்ச் சிங்கம் எனப்படும் ஷேக் அப்துல்லா பல ஆண்டுகளாக சிறையில் இருந்தார். விடுதலை இயக்கம் மக்கள் இயக்கமாக மாறி, ஆயிரக்கணக்கானோர் சிறைகளை நிரப்பி, சிறையில் இனி இடமில்லை என்ற நிலை வரும்போதுதான் அரசு சிறையிலிருப்போரை விடுதலை செய்யவேண்டி ஏற்படும்! 25 இலட்சம் தமிழ் மக்களில் 25 ஆயிரம் பேர் சிறை செல்லத் தயாரென்றால் இன விடுதலை நாளையே கிடைக்கும்!

ஃ

கு. இராகுலன்,
செல்வநாயகம் வீதி,
வேலணை கிழக்கு.

கே: ஆறுமுக நாவலரின் ஞாபகார்த்த விழா விலே தபாலமைச்சரும், கலாச்சார அமைச்சரும் பேசும் போது மககள் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தனர். நல்லூர் எம். பி. அருளம்பலம் பேசும்போது மக்கள் கலைந்து சென்றுகொண்டிருந்தனர். அது ஏன்?

ப: துரோகிகளுக்கு எப்படிப்பாடம் புகட்ட வேண்டும் என்பதை மக்கள் அறிந்துகொண்டுவிட்டதனால்! கலாசார அமைச்சர் ஒரு சிங்களவர்; தபால் அமைச்சரோ நியமன உறுப்பினர்; அருளம்பலமோ மக்களின் வாக்குகளினால் பா. உ. பதவியைப் பிடித்து மக்களையே காட்டிக் கொடுத்தவராயிற்றே!

ஃ

செ. சோமநாதன்,
மண்டைதீவு.

கே: சந்தி சிரிக்கும் மந்திகளின் சொந்தப் புத்தியில் உருவான 'சுந்தரி'யில் தமிழ்த் தலைவர்களை இகழ்ந்தும் தமிழ்த் துரோகிகளைப் புகழ்ந்தும் செய்திகள் வெளியிடுவதேன்?

ப: சிந்தாமணி, தினபதி எனும் நாடறிந்த பரத்தைகளின் சகோதரிதானே சுந்தரி? சுந்தரி மட்டும் ஒழுக்கமாக இருப்பாள் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

கே: கறுப்புக்கொடி காட்டுவதாலும், ஹர்த்தால் அனுட்டிப்பதாலும் ஏதாவது பயன் உண்டா?

ப: ஆட்சியாளர்களுக்கு தமிழர்களின் அதிருப்தியை தெரிவிப்பதற்கு இவையெல்லாம் நிச்சயம் பயன்படும்!

ஃ

ஆ. தங்கராசா,
யாழ்ப்பாணம்.

கே: முதல்வர் மு. கருணாநிதியைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: சொலல் வல்லன்; சோர்விலன்; அஞ்சான் — அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது!

கே: நடிகர் எம். ஜி. ஆரின் அ. தி. மு. க. பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களிடம் உள்ள நேர்மையையும், ஒழுக்கத்தையும் எப்போதுமே மதிப்பவன் நான். ஆனாலும் அண்ணா தி. மு. க. என்றோர் தனிக்கட்சி ஆரம்பித்து, கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கழக அரசுக்கு எதிராக கிளர்ச்சி பண்ணாமல், தி. மு. கழகத்திற்குள்ளேயே தனித்து நின்று கழகத்தை தூய்மைப்படுத்த நடவடிக்கையெடுத்திருந்தாரென்றால், நான் அவரை ஆதரித்திருப்பேன். களை பிடுங்குவதாக கூறிவிட்டு இப்போது பயிரை அல்லவா தெரிந்தோ தெரியாமலோ எம். ஜி. ஆர். முயலுகிறார்!

ஃ

ப. குயிலினி,
நல்லிணக்கை.

கே: சுதந்திரன் மூலம் நாமெல்லாம் அண்ணாவின் தமிழ் நாட்டை கண்டு களிப்புற்றோம். அது மீண்டும் அண்ணாவின் இலட்சியத் தமிழ் நாடாக காட்சியளிக்கப்போவது எப்போது?

ப: தமிழ் நாடு பூரண சுயாட்சி பெறும்போது!

கே: தமிழ்க் கவிஞன் பாரதி எமது ஈழத்தை 'சிங்களத்தீவு' என்றதன் காரணம்?

ப: இன்றைக்குக்கூட இந்தியாவில் பலர் இலங்கையில் தமிழர்கள் தனிப் பிரதேசத்தில் தனி இனமாக வாழ்ந்துவருவதை தெரிந்து கொள்ளாமல், இலங்கையை சிங்களவர்களின் நாடு என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது பல்லாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பாரதி இலங்கையை சிங்களத்தீவு என்று குறிப்பிட்டதில் ஆச்சரியம் எதுமில்லை!

ஃ

ஒ. சிவனேஸ்வரன்,
கொழும்பு-15.

கே: நீங்கள் தமிழர் கூட்டணி கொடியிலுள்ள சிவப்பு மஞ்சள் வண்ணத்தில் சுதந்திரன் தலையங்கத்தை திட்டினால் என்ன?

ப: திட்டினால் அழகாகத்தான் இருக்கும். ஆனால் அதை சுதந்திரன் நிர்வாகம் தான் முடிவு செய்ய வேண்டும். உங்கள் யோசனையை சுதந்திரன் நிர்வாகத்திற்கு சமர்ப்பிக்கிறேன்!

# தமிழ் மக்களை மதரீதியில் பிளவுபடுத்தச் சதியா?

## நாவலர்சபை துணைச் செயலாளரின் சூடான அறிக்கை!

நாவலர் சபை யாழ்ப்பாணத்தில் நடத்திய நாவலர் விழாவையொட்டி நிலவிய பரபரப்பான கருத்துக்களையும் இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வருவதையும் அவர்கள் வருகையைப் பகிஷ்கரிக்கக்கோரிய கூட்டு முன்னணி தீர்மானத்தையொட்டி சைவ பரிபாலன சபைத் தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள் வெளியிட்ட அறிக்கையிலுள்ள கருத்துக்களையும் தெளிவுபடுத்தும் முகமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஸ்தாபகர்களில் ஒருவரும் உதவிச் செயலாளருமாகிய திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்கள் வெளியிட்ட அறிக்கை பின் வருமாறு:-

இம்மாதம் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமைச்சர்களை பகிஷ்கரிக்கும்படி கூட்டுமுன்னணி எடுத்த தீர்மானத்தைப் பற்றிச் சைவ பரிபாலன சபைத் தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள் சமய சர்ச்சையை உருவாக்கி விட்டார்.

### கிறிஸ்தவரே தொடங்கியவர்

கிறிஸ்தவர் தலைமையில் நாவலர் விழா பகிஷ்கரிப்பு தீர்மானமா? என்ற ஒரு பிரச்சினையை எழுப்பி சைவ மக்களையும் கிறிஸ்தவ அன்பர்களையும் வீணாக மோதவிட்டிருக்கின்றார். இந்த நாட்டில் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் நாவலர் பெருமானைப் போற்றுகிறார்கள். நாவலர் பெருமையை நிலைநாட்டப் பாடுபட்டு வருகிறார்கள். நாவலர் பெருமானுக்குச் சிலை நாட்டுவதற்கும், முத்திரை வெளியிடுவதற்கும், நாவலரது கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்கும் மற்றும் நாவலர் பணிகளைச் செய்வதற்கும் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையை உருவாக்க முன்னின்று உழைத்ததும் மட்டுமல்லாமல் அச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவரும் கிறிஸ்தவரான திரு. எச். டபிள்யு. தம்பையா அவர்களே.

### பகையை வளர்க்கத் திட்டம்

ஒரு கிறிஸ்தவர் தலைமையில் உருவாக்கப்பட்ட நாவலர் சபை 150 ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகின்றது என்பதை சைவ பரிபாலன சபைத் தலைவர் அறியாமல் இருப்பதையிட்டு நாவலர் சபை உதவிச் செயலாளர் என்ற முறையில் வேதனைப் படுகின்றேன். அதுமட்டுமன்றி நாவலர் சிலை நாட்டு விழா, நாவலர் மகாநாடு போன்றவற்றிற்குக் கிறிஸ்தவ அன்பர்கள் நிதியுதவி அளித்துள்ளார்கள். நாவலர் பெருமானுடைய நினைவை நிலைநாட்டுவதற்கும் இலட்சியங்களைப் பரப்புவதற்கும் கிறிஸ்தவர்கள் பேருதவி புரிந்துவரும் இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர்களின் வருகையைப் பகிஷ்கரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்ட கூட்டு முன்னணியின் கூட்டத்திற்கு கிறிஸ்தவரான திரு. நேசையா தலைமை வகித்ததை (தீர்மானம் எடுக்கும் போது அவர் தலைமை வகிக்கவில்லை) ஒரு பொய்க் காரணம் காட்டி மிகஅத்தியாய வாழ்ந்துவரும் கிறிஸ்தவர்களையும், தலைவர்களையும் பகைப்படுத்தும் வகையில் அறிக்கை வெளியிட்டது வருந்தத்தக்கதாகும்.

### சைவசமயத்தவருக்குப் பாரபட்சம்

நாவலர் கட்டிக்காத்த சைவத்தையும் தமிழையும் இந்நாட்டில் வாழவைத்த தற்காகத் தமிழர்கள் சாதி சமய வேறுபாடின்றி ஒன்றுபட்டிருக்கும் இவ்வேளையில் பொறுப்புவாய்ந்த சைவ சமய ஸ்தாபனத்தின் தலைவராகிய நீங்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையை நிய சக்திகளும் சில பத்திரிகைகளும் திரித்துக்கூறி சைவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் மனக்கசப்பை ஏற்படுத்த நீங்கள் இடமளித்துள்ளீர்கள்.

சைவத்துக்கும் சைவசமய நிறுவனங்களுக்கும் பின்வரும் அநீதிகள் நடக்கும் பொழுது நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை:-

1. சைவர்களைப் பௌத்த பாடசாலைகளை திறவி பௌத்த சமயத்திற்கு மதமாற்றம் செய்யப்படுகிறது.

2. கதிர்காமத்திலுள்ள இந்துக்களின் தர்ம சொத்துக்களான மடங்களை இடித்துத் தள்ளியது. இராமகிருஷ்ண மிஷனுக்குச் சொந்தமான மடத்தைப் பொறுப்பேற்று பௌத்த நிர்வாகிகளுக்குக் கொடுக்க இருப்பது.

3. அண்மையில் கொழும்பு கொட்டாஞ்சேனை சைவ இளைஞர் முன்னேற்றச் சங்கத்திற்கு ஒதுக்கிய நிலத்தைக் கட்டிடம் கட்டிய பின்னர் அரசாங்கம் சுவீகரித்துள்ளது.

4. ஏனைய சமய அரசாங்க ஊழியர்களுக்கு வழிபாட்டுக்காக இரண்டு மணித்தியால ஓய்வு கொடுத்திருப்பதுபோல் இந்து அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் இரண்டுமணித்தியால விடுதலை கொடுக்க அரசாங்கம் மறுத்துள்ளது.

(குறிப்பு:- இந்த அறிக்கை சகல தமிழ் நாடேடுகளுக்கும் அனுப்பப்பட்டும் அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் பிரசுரிக்கப்படவில்லையாம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே நமது உயிர் நாடி!

அன்பு நண்பா,

மனிதகுலத்துக்கு பெருந்தீமை தந்திடும் இயற்கையின் பல்வேறு குரூர வடிவங்களில் 'புயலும்' ஒன்று! புயல் வீசிடின், பயிர் பச்சைகள் சாய்ந்திடும்; வாழைகள் முறிந்து வீழ்ந்திடும்; குடிசைகள் பிய்த்தெறியப்படும்; மரங்கள் முறிந்து வீழ்ந்து மக்களுக்கு அபாயம் தந்திடும்; மக்களைக் கண்ணீர் சிந்திட வைத்திடும் என்பதையெல்லாம் நீ அறிவாய்! அண்மையில் தமிழகத்தில் வீசிய பெரும் புயலால் ஏற்பட்ட பெருநட்டம் கணக்கிலடங்காதது என்பதையும் ஏடுகளில் படித்திருப்பாய்! புயல் பொது மக்களுக்கும் நாட்டுக்கும் விளைக்கின்ற கொடுமைகளோ சொல்லுந்தரமன்று!

புயலைப்பற்றி எனக்குத் தெரியாதா? அதுவும் தமிழ் இலங்கை எத்தனை புயல்களைச் சந்தித்திருக்கிறது — அது பற்றி இப்போது நீ எடுத்துரைத்திட வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது என்று கேட்டிடுவாய்! புயலைப் பற்றி உனக்கு எடுத்துரைத்திட நேர்ந்ததற்கு காரணம் தம்பியொருவன் 'புயலை'ப் பிடித்து எனக்கு அனுப்பிவைத்து அது பற்றி எழுது என்று கட்டளையிட்டிருப்பதுதான்!

என்ன? புயலைப் 'பிடித்து' அனுப்பினுன் என்று ஆச்சரியத்துடன் கேட்பாய்! ஆம் — இது இயற்கையாக வீசும் அந்தப் புயல் அல்ல — வெறும் கடதாசிப் புயல்! அதுவும் 'நீல' நிறப்புயல்!

ஆம் நண்பா, அமைச்சர் குமாரசூரியரின் ஆசியுடன் அவரது புகழ் பாடிடுதற்கு ஆளுங் கட்சியின் வால் பிடித்து தாள்பணியும் கும்பலொன்று வெளியிட்டுள்ள ஏடொன்றுக்குப் பெயர்தான் 'புயல்'! அந்த ஏட்டின் பிரதியொன்றைத்தான் தம்பியொருவன் என் பார்வைக்கு அனுப்பிவைத்திருந்தான்!

நண்பா, அவர்களது ஏட்டுக்கு பொருத்தமான பெயர்தான் 'புயல்'—இல்லையா? இந்நாட்டில் தமிழ் மொழியையும், தமிழினத்தையும் தமிழர் மதங்களையும் கலாசாரத்தையும் பூண்டோடு பிடுங்கியெறிந்து, அழித்தொழிக்கும் நோக்குடன் இன்று வீசுகின்றது பயங்கரமான முறையில்—சிங்கள ஏகாதிபத்தியம் எனும் புயல்! சிங்கள ஆதிக்க உணர்ச்சியெனும் புயல்! தமிழர்களின் உரிமைகளை பிடுங்கியெறியும் தனிச் சிங்களப் புயல்! இந்தப் புயலிலிருந்துதான் தமிழ் இனத்தையும், மொழியையும் பாதுகாத்திடும் முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்! தமிழர் கூட்டணி ஈடுபட்டிருக்கிறது! இந்தப் புயலினுல் தமிழினத்தின் விடுதலை உணர்ச்சி என்கின்ற சுடர் விளக்கு அணைந்து போகாதபடி கண்ணும் கருத்துமாக காத்து வருகிறோம் நாம்!

'புயலை' புரட்டிப்பார்த்தேன் — ஏ, அப்பா! ஒரே திட்டு! என மீதும் சுதந்திரன் ஏடு மீதும்! தெளிவான சிந்தனையும், நிர்க்கமான கொள்கையும் இருந்தால் அல்லவா குமாரசூரியர் கும்பலிடம் அவற்றை மக்களிடம் எடுத்துரைப்பதற்கு! எனவே என்னைத் திட்டித்தீர்த்திடுவதிலே தனிச் சுவை காண்கிறார்கள் அவர்கள்! என்னைத் திட்டுவதன் மூலம் தங்கள் எசமானர்களைத் திருப்திப்படுத்தி தங்கள் வயிற்றைக் கழுவுவதற்கு அவர்கள் விரும்பினுல் அதற்கு குறுக்கே நான் நிற்கமாட்டேன்!

மக்கு, மண்டு என்று இப்படி என் மீது என்னென்னவோ எல்லாம் வசை மொழிகளும் வக்கணைகளும் பாடியிருக்கிறார்கள் ஆளுங்கட்சியின் ஏவலாளர்கள் தங்கள் ஏட்டில்! இழி மொழிகளும் ஏசல் மொழிகளும், பழிச் சொற்களும் எம்மை எம் இலட்சியப் பாதையிலிருந்து மாற்றிவிட முடியாதென்பது நாடறிந்த உண்மை! என் மீதும், சுதந்திரன் மீதும் இதற்குமுன் வசைபாடிய ஏடுகள் தாம் எத்தனை? இன்று அவை இருந்த இடம் தெரியாமலே மறைந்துவிட்டன என்பதை குமாரசூரியர் கும்பல் புரிந்துகொள்ளவேண்டும்!

நண்பா, ஆளுங்கட்சியின் தமிழ் எடுபிடிகள் இப்போது ஒரு புதுத் தந்திரத்தைக் கையாண்டு தமிழ் மக்களை ஏமாற்றிவிடலாமென்று நினைக்கிறார்கள். தமிழைப் பற்றி பேசிவிடுவதால், தமிழையும் சைவத்தையும் காத்திட்ட நாவலரைப்பற்றி பேசி விடுவதால் தமிழ் மக்களை விடுதலைப்பாதையிலிருந்து திசைதிருப்பிவிடலாமென்று கனவு காண்கிறார்கள்!

தமிழ் அன்னையின் துகிலை நடுச்சந்தியில் வைத்து உரிகிறது சிங்கள ஏகாதிபத்தியம்! அந்தச் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு சாமரை வீசிக்கொண்டே துகிலுரியப்படும் தமிழ் அன்னையின் 'எழிலையும்' சுவைத்து வர்ணிக்க முற்படுகிறார்கள் ஆளுங்கட்சியுடன் ஒட்டியிருக்கும் தமிழ் எட்டப்பர்கள்! சீ, இவர்களுக்கு தமிழ் அன்னையைப் பற்றி உச்சரிக்க என்ன யோக்கியதை இருக்கிறது!

தமிழன்னைக்கு ஆபத்து ஏற்படும்போது— தமிழ் அன்னை மானபங்கப்படுத்தப்படும் போது—துடித்தெழுந்து தோள்தட்டி எதிரிகளின் முதுகெலும்பை முறிக்க எவன் வேகத்துடன் முன் வருகிறானோ அவன்தான் தமிழ் இரத்தம் ஓடுகின்ற உண்மையான தமிழன் என்பேன்!

நல்லூரில் அரசாங்க ஆதரவுடன் நடைபெற்ற நாவலர் மாநாட்டிலே அமைச்சர் குமாரசூரியர் பேசிய பேச்சை மிகவும் கவனத்துடன் படித்தேன் — திருப்பித்திருப்பிப் படித்தேன்! நாவலரை இவர்கள் ஏன் பிடித்துத் தொங்குகிறார்கள் என்பதை அந்தப் பேச்சு துலாம்பரமாக எடுத்துக்காட்டிவிட்டது!

நாவலர் பெயரைப் பயன்படுத்தி— ஒன்றுபட்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தை மத அடிப்படையில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என்று கூறு போடுவதற்கு குமாரசூரியர் கும்பல் முயற்சிசெய்கிறது—அதற்கு அடிபாடுகின்றன இந்நாட்டு ஏடுகள்! ஆம், குமாரசூரியர் மூச்சுக்கு முன்னூறு தரம் 'சைவத்தமிழ் மக்கள்'

## அரசியல் மேடை

'சைவத் தமிழ் மக்கள்' என்று ஜெபம் செய்திருக்கிறார் தமது பேச்சில்!

இதன் பொருள் என்ன? ஒன்றுபட்டிருக்கும் தமிழ் தேசிய இனத்தை—சைவத் தமிழர்கள், கிறித்தவத் தமிழர்கள் என்று இரு கூறுகப் பிளவுபடுத்துவதுதான்! ஆம் இதற்குத் தான், நாவலரை சாதி வெறியன் பிற்போக்குவாதி என்று திட்டிய ஆளுங் கட்சியினர் இன்று நாவலர் புகழ்பாட ஆரம்பித்திருக்கிறார்கள்!

எனவே ஆளுங்கட்சியினரின் இந்தத் திட்டமிட்ட சூழ்ச்சியை— சதியை தமிழ் மக்கள் புரிந்துகொண்டு எச்சரிக்கையுடனிருப்பது மட்டுமல்ல இந்த வலையை அறுத்தெறிந்திடவும் முன்வரவேண்டும்!

நண்பா, தமிழினம் இன்று கட்சி, மத, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து— ஒரே தலைமையில் தமிழர் கூட்டணியின் கீழ் ஒன்றுபட்டு உரிமைக்குப் போராடி வருவது கண்டு ஆளுங் கட்சியினர் அச்சமும் கிலியும் பிடித்து அரற்றத் தொடங்கியிருக்கிறார்கள். எப்படியாவது இந்த ஒற்றுமையை முறியடித்திட முடியாதா என்று ஆலாய்ப் பறக்கிறார்கள்!

"திரு தொண்டமான்—திரு. செல்வநாயகம் ஆகிய இரு தலைவர்களின் கூட்டு நாட்டுக்கு நன்மை பயப்பதாக இல்லை. இருவரும் பல இரகசியத் திட்டங்களை ஏற்படுத்தி நாட்டை சமஷ்டி அரசுக்கு அடிகோலவிருக்கின்றனர். ஆனால் அவர்களின் ஜம்பம் நம் மத்தியில் பலியாது.

"அண்மையில், தொண்டமான் யுகங்கள் 1970 தோடு முற்றிற்று. இனிமேல் அவர்கள் எம்மத்தியில் வாலாட்ட முடியாது. அத்துடன் இந்நாட்டை சமஷ்டி வழியில் அல்லது தொண்டமான்—செல்வநாயகம் இரகசிய திட்ட வழியில் செயல்பட அனுமதியோம். அவர்களை எதிர்த்துப் போராடுவோம். சிங்கள மக்களாகிய நாம் ஐ. தே. க.—ஸ்ரீ. ல. சு. க. என்ற கட்சி பாகுபாடின்றி ஐக்கியப்பட்டு தொண்டமான்—செல்வநாயகம் ஆகியவர்களின் இரகசியத் திட்டத்தை முறியடிக்கப் போராடியே தீருவோம்."

இவ்வாறு பச்சை வகுப்புவாதத்தை கக்கியிருப்பவர் ஆளுங்கட்சியிலுள்ள யாரோ ஒரு பின் வரிசை உறுப்பினர் அல்லர்! காணி [illegible] இவ்வாறு. [illegible] தமிழர் கூட்டணிக்கு [illegible] கிறார்!

ஆம், ஒரு பக்கம் தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்றெல்லாம் பேசிக்கொண்டே மறுபக்கம் உரிமை கேட்டு ஒன்றுபட்டிருக்கும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக பெரும்பான்மையினரைத் தூண்டிவிடுகிறார்கள் பொறுப்பிலுள்ள அமைச்சர்கள். அமைச்சர்களே இப்படியென்றால் குட்டித்தேவதைகள் இன்னும் என்னவெல்லாம் செய்யும்?

ஆனால் ஒன்று மட்டும் கூறுவேன்—எந்தவித பயமுறுத்தலுக்கும் மிரட்டலுக்கும் தமிழ் மக்கள் இனி அஞ்சமாட்டார்கள். என்ன நடந்தாலும், எத்தகைய கொடுமைகளை சந்திக்கநேர்ந்தாலும்—1958ம் ஆண்டு இனக்கலவரம் போன்றதைவிட இன்னும் பெரிய கொடூரம் நடந்தாலும்—இந்நாட்டில், தமது சுதந்திரத்தையும் உரிமைகளையும் நிலைநாட்டப் போராடியே தீருவது என்று தமிழ் மக்கள் உறுதி பூண்டுவிட்டார்கள்!

காணியமைச்சருக்கு தமிழினம் தரக்கூடிய ஒரே பதில்—ஏற்பட்டுள்ள இன ஒற்றுமையை இன்னும் வலுவுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் உருவாக்குவதுதான்! மலையகமும், மட்டுநகரும், மன்னாரும் வன்னியும் யாழ்ப்பாணமும், திருமலையும் இன்னும் நெருங்கி உறவாடுவதுதான்! கிறிஸ்தவமும், இந்து மதமும், இஸ்லாமும் இணைந்து நிற்பதுதான்! ஆம் ஒற்றுமையே நமது உயிர்நாடியாக விளங்கிட வேண்டும்!

நண்பா, தமிழினத்துக்கு இருள் சூழ்ந்த 1972ம் ஆண்டு இன்றுடன் கழிகிறது! தமிழினத்தின் உரிமைகளைப் பறித்து வரலாற்றில் முதல் தடவையாக சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு மீளா அடிமைகளாக்கும் புதிய அரசியல் சாசனம் உருவானது இந்த ஆண்டு மே 22ம் நாள்தான்! ஆனால் அதே சமயம் தீமையிலும் ஒரு நன்மையுண்டு என்பதுபோல் பிளவுபட்டுக் கிடந்த தமிழினம் ஓரணியாக தமிழர் கூட்டணியாக ஒன்றுபட்டதும் இந்த ஆண்டுதான்!

புதிய அரசியல் சட்டம் புகுத்தப்பட்ட மே 22ம் நாளே ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டமும் பிரகடனப்படுத்தப் பட்டுவிட்டது! மே 22ம், 23ம், 24ம் நாட்களில் தமிழ் இலங்கை முழுவதும் பூரண துக்கதினமும், அர்த்தாலும் அனுட்டித்தோம்! இந்தப் போராட்டத்தையொட்டி கைது செய்யப்பட்ட எழுபதுக்கு மேற்பட்ட இன்பத் தமிழ்க் காளைகள் ஆறு திங்கள் சிறைவாசத்துக்கு பின் அண்மையிலேயே வெளியே வந்தனர்! எனினும் அருமைக் கவிஞர் காசி ஆனந்தனும், ஆனந்த விநாயகமும் இன்னும் வாடிக்கொண்டிருக்கிறார்கள் வெலிக்கடைச் சிறையினுள்ளே இன்று 212 வது நாளாக!

தமிழினத்தின் சார்பில் ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்து ஆட்சியாளர்களுக்கு செப்டம்பர் 30 வரை மூன்று மாதக் காலக்கெடு கொடுத்தோம்! திமிர் பிடித்த ஆட்சியாளர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டதால் அக்டோபர் 2 முதல் மீண்டும் அர்த்தாலுடன் தமிழினம் போராட்டப் பாதையில் இறங்க நேரிட்டது! போராட்டத்தின் ஓர் அம்சமாக தேசிய பேரவை உறுப்பினர் பதவியை உதறி எறிந்து ஆட்சியாளருக்கு சவால் விடுத்துள்ளார் பெரியவர் செல்வா!

நண்பா, இது நடந்து முடிந்த நிகழ்ச்சிகள்! புத்தாண்டில் புதிய வேகத்துடன் போராட்டத்தில் இறங்க நேரிடலாம்! தமிழ் இலங்கைக்கு வருகைதரும் அமைச்சர்களுக்கு புதிய அரசியல் திட்டத்தின் மூலம் தமிழினத்தின் உரிமைகள் அங்கீகரிக்கப்படும் வரை — கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிப்பதென்று தமிழர் கூட்டணி சென்ற வார இறுதியில் எடுத்திட்ட முடிவு உனக்கு இனித்திருக்கும் என்பதை நான் அறிவேன்!

தலைவர்களின் கட்டளை வரும்போது களம் காண்போம்! கன்னித் தமிழின் கட்டுறுப் போம்! விடுதலை உணர்ச்சி எனும் சுடர் விளக்கை அணையாமல் எடுத்துச்செல்வோம்! புத்தாண்டில் இதுவே நாம் எடுத்திடும் உறுதியாகட்டும்!

உன் அன்புத்தோழன்

கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சுடரொளி அணைந்தது!

இந்திய அரசியல் வானிலும், ஆத்மீகத்துறையிலும், இலக்கியத்துறையிலும் ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த ஒரு பெரிய சுடரொளி அணைந்துவிட்டது.



அரசியலிலும், சமுதாய பிரச்சினைகளிலும், உலகநாடுகளில் அமைதி நிலவவும், அவ்வப்போது ஆலோசனைகளும், புத்திமதிகளும் கூறிக்கொண்டு வந்த பெரியவர் — மூதறிஞர் ராஜாஜி அவர்களின் கண்கள் மீளா துயிலில் ஆழ்ந்து விட்டன.

மகாத்மாகாந்தி, பட்டேல், ஜவகர்லால்நேரு போன்றமூத்த தலைவர்களுடன் தோளோடு தோள் நின்று போராடி இந்தியத்தாயின் அடிமை விலங்கை உடைத்தெறிந்தவர் மூதறிஞர் ராஜாஜி.

தாய்நாட்டு விடுதலைக்காக தன்னுடைய தொழிலையும் துறந்து காராக்கிருகத்தின் துன்பங்களையெல்லாம் சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொண்டவர் ராஜாஜி.

மகாத்மா காந்தியடிகளுக்குப்பின்னர், ஆத்மீகம் கலந்த அரசியலை இந்திய மக்களுக்கு உபதேசித்து வந்தது மட்டுமன்றி தாமும் பின்பற்றி வாழ்ந்த மேதை அவர்.

பொதுவாழ்வில் ஈடுபடுவோர் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு அரசியல் ஞானி ராஜாஜி அவர்கள் இலக்கணமாக வாழ்ந்து காட்டினார். நேர்மை, வாய்மை, நாணயம், அஞ்சாமை, ஒழுக்கம், தியாகஉள்ளம், போன்ற தார்மீகப் பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்து தமிழ் நாட்டின் பழம்பெரும் பண்பாட்டின் சின்னமாக விளங்கிய தார்மீகத் தலைவர் அவர்.

உயர்குலம் என்று கூறப்படும் பிராமண குலத்தில் பிறந்தவரானாலும், தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக ஈடுபட்டு, தமிழ்நாட்டு ஆலயக்கதவுகளை அரிசனமக்களுக்கு திறந்துவிட்டவர் — கலப்புத் திருமணத்தை தம் குடும்பத்திலேயே செய்துகாட்டியவர் — மதுவிலக்குக் கொள்கையை உறுதியாக பின்பற்றியவர்—என்கின்ற பல பெருமைகள் அவருக்குண்டு.

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியாகிய முதலாவது தேசாதிபதி என்கின்ற பதவியையும், மற்றும் பல்வேறு உயர் பதவியையும் வகித்த ராஜாஜி, தமது பிற்காலத்தில் ஒரு முனிவர் போலவே விருப்பு வெறுப்பற்று வாழ்க்கை நடத்தினார். உள்ளத்துக்கு சரியென்று படுவதை அப்படியே உரைக்கின்ற வைரநெஞ்சம் அவருடையது.

இந்தியாவின் பழம்பெரும் காப்பியங்களான இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, திருக்குறள் போன்றவற்றை எல்லோருக்கும் விளங்கும் எளிமையான தமிழில் வடித்துத்தந்து இலக்கியத்துறைக்கு பெரும் சேவையாற்றியவரும் அவரே.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இலங்கைத் தமிழர்களின் மிக நெருங்கிய நண்பராகத் திகழ்ந்தார். இலங்கைத் தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கையை ஆதரித்து துணிச்சலுடன் அவர் வெளியிட்ட கருத்தினை இங்கு நினைவு கூறுவது நல்லது என்று கருதுகிறோம்.

'இலங்கைத் தமிழர்கள் — இலங்கையின் பழங்குடிகள். இலங்கையின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு எடுத்துவந்தவர்கள். படிப்பு, பண்பாடு, தேசபக்தி எதிலும், முன்னணியில் நின்றவர்கள். அவர்களைச் சமாதானப்படுத்த முடியாமல் அடக்குமுறைப் பிரயோகத்தினால் என்ன பயன் பெறமுடியும்?

'மெஜாரிட்டி', ஒற்றுமை என்கிற ஏமாற்றும் தந்திரங்களைப் பிடித்துத் தொங்காமல் மெய்யான ஒற்றுமையை நாடவேண்டும். தமிழருக்குப் பிரதேச சுதந்திரம் தந்துவிட்டு சமாதானம் செய்துகொண்டு இலங்கையின் வியாபாரத்துக்கும் பாதுகாப்புக்கும் மட்டும் சமஷ்டி ஆட்சி நடத்த வேண்டும்.

இலங்கைத் தீவு சிங்களவாது என்ற மாய மானைத் தொடர்ந்து சென்றால் சீதை அரக்கன் வசமாவாள். இது இந்தியத் தமிழரின் எச்சரிக்கை! நட்பு மனப்பான்மையுடன் செய்யும் எச்சரிக்கை! கவனிக்கத் தகுந்த எச்சரிக்கை!

— 1958-ம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்ற நேரத்தில் கல்கியில் ராஜாஜி எழுதிய தலையங்கம்.

"அமைதியான அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழர்கள் நிச்சயம் வெற்றியடைவார்கள். தமிழர் பெருவாரியாக வாழும் பிரதேசத்துக்கு தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட சுயாட்சி அளிக்கவேண்டும். இலங்கைத்தமிழர்கள் கேட்பது தனி இராச்சியமல்ல; பிரதேச சுயாட்சியையே அவர்கள் கோருகிறார்கள். எனவே சமஷ்டி அரசு முறையின் கீழ் இலங்கைத்தமிழ் பிரதேசங்களுக்கு சுய ஆட்சி உரிமை வழங்கப்படவேண்டும்"

— 21. 9. 1958-ல் சென்னை இலட்சுமிபுர இளைஞர் சங்கத்தில் ராஜாஜி நிகழ்த்திய தலைமையுரையிலிருந்து.

இவ்வாறு தீர்க்கதரிசனத்துடன் ஈழத்தமிழர்களின் கோரிக்கையை துணிச்சலுடன் ஆதரித்து நின்ற மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பிரிவு ஈழத்தமிழினத்தின் சொந்த இழப்பாகும்!

மேதை ராஜாஜியின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன், இந்திய மக்களின் துயரத்தில் ஈழத்தமிழர்களின் சார்பில் நாமும் பங்கு கொள்கிறோம்.

# டியநில்லைத் தோட்டத்தில் நடைபெற்ற பயங்கரம்!

## மலை நாட்டு மண்ணுக்கு உழைத்தவர்களை மண்ணே பலி வாங்கிய கொடுமை!

அண்மையில் மிகப்பயங்கரமான மண் சரிவு ஒன்று இராகலையை அடுத்துள்ள டியநில்லைத் தோட்டத்தில் இடம் பெற்றது. மலைநாட்டு மண்ணைப் பொன் கொழிக்கும் பூமியாக்கிட, தங்கள் உழைப்பை வழங்கி வந்த 19 தொழிலாளர்களை—அத்தனைபேரும் தமிழர்கள் — மண் மாதா பலியெடுத்து கொடூரம் மிக இழைத்தாள். பூவும், பிஞ்சும், பழங்களும் பலியாகிய நெஞ்சைக் குலுக்கும் சோக நிகழ்ச்சி அந்தப்பகுதி மக்களின் உள்ளங்களைவிட்டு இன்னும் மறையவில்லை. இயற்கையின் கொடூரத்துக்கு பலியாகிய குடும்பங்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

அங்கு நடைபெற்ற நெஞ்சையுருக்கும் சம்பவங்களை இங்கு தொகுத்துத் தருகிறோர் அவற்றை நேரில் கண்ட இராகலையிலுள்ள நமது நிருபர் 'நடா'

20-12-72 நேரம் கிட்டத்தட்ட 5-30 மணியிருக்கும். மழையும் இடைவிடாது பெய்து கொண்டிருந்தது. அங்கு டியநில்லை தோட்ட அரிசி போடும் பழைய ஸ்டோர் கட்டிடத்தில் வாராந்த பங்கீட்டரிசியை பெறுவதற்காக தொழிலாளர்கள் அங்கு காத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது...! திடீரென வானத்தைப் பிளந்து கொண்டு வரும் சத்தம் கேட்டது. இதனைக்கேட்டும் கேட்டு முடிவதற்குள் அங்கிருந்து கோரமாக உருண்டோடி வந்த சுமார் மூன்று ஏக்கா நிலப்பரப்பு அங்கிருந்தோரை உயிரோடு மண்ணோடு புதைத்து விட்டது. அந்தோ செய்தி கேட்டு அருகில் உள்ள மக்கள் தொழிலாளர்கள் திரண்டு வர அவர்கள் நிலையினைக் கண்ட டியநில்லை உதவி அத்தியட்சகர் திரு. ஆசீர்வாதம் ஸ்தலத்திற்கு விரைந்தார். தோட்டப் பிரட்டுக் கணக்கெடுப்பின்படி சுமார் 20 பேர் மண்ணில் புதையுண்டிருக்க கூடுமென அவரால் அறிவிக்கப்பட்டது. இந்த விடயத்தை உடன் அறிந்த சூரிய காந்தி குரூப் முகாமையாளர் திரு. தியாகராஜாவும் அவரது உதவியாளர்களும் மின்னல் வேகத்தில் ஸ்தலத்திற்கு விரைந்தனர். 21ந் திகதி காலையில் நுவரெலியா இராகலை பொலிசார், இராணுவம் மீட்பு வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டார்கள்.

### மீட்பு வேலைகள்

மண்ணுக்குள், மண்ணோடு புதைந்துவிட்ட தொழிலாளர்களின் சடலங்களை மீட்கும் வேலையில், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது தொண்டர்களை வழிநடத்த சூரியகாந்தி தோட்ட முகாமையாளர் திரு. தியாகராஜா, சூரியகாந்தி தோட்ட உதவி அத்தியட்சகர் திரு. ஜெயவிக்கிரம டியநில்லை தோட்ட அத்தியட்சகர் திரு. ஆசீர்வாதம் ஆகியோர் பின்வரும் தொண்டர் படையுடன் மண்வெட்டி சகிதம் மீட்பு வேலைகளில் ஈடுபட்டனர்.

### சூரியகாந்தி தொண்டர்கள்

பெரியசாமி, தேவராசு, அண்ணாமலை, சுப்பன், மகாலிங்கம், கணேச, சச்சிதானந்தன், சுப்பிரமணியம், கிட்ணசாமி, தனபால, சுப்பையா, ரெங்கசாமி, சின்னத்தம்பி, கோபால், தர்மலிங்கம், பி. காந்தி, பி. இராசு, பி. கே. இராமசாமி ஆறுமுகம், (இ. தொ. க. தலைவர்) ஆர். சுப்பையா, பி. கே. கணபதிப்பிள்ளை, தங்கராசு, (டிரைவர்)

சந்தசாமி, (சுப்பவைசர்)

அம்மாசி சின்னையா இ. தொ. கா. தலைவர்

### டியநில்லை தோட்டம்

எம். முத்துலிங்கம், முத்து... (இ. தொ. கழகத் தலைவர்) முனியாண்டி, இராமு, பாலு, ஜீவராசு, முத்தையா (கங்காணி) வீரப்பன், சிவஞதம், வேலு, (இ. தொ. கா. தலைவர்) பழனி, சண்முகநாதன் கந்தையா, லெட்சுமன், மாணிக்கம், அண்ணாமலை, ஐயாவு, இராமையா.

### அரபண்பத்த டிவிசன்

இராமையா, (தலைவர் இ. தொ கழகம்) வெள்ளைச்சாமி, பெரமையா, வேலாயுதம், (தலைவர். இ. தொ. கா) மற்றும்பல இளைஞர்கள் மீட்பு வேலைகளில இரவு பகலாக ஈடுபட்டிருந்தனர். மனிமென ஒ... திருந்த மண்ணைக் கிளறும் வேலையில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் சடலங்களை மீட்க பெற்றெண்... ஒரு வழி 22ந் திகதியே வெற்றியைத் தந்தது. மண்ணுக்குள்ளிருந்து தோண்டி எடுக்கப்பட்டவர்களின் அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டோர் விபரங்கள் பின்வருமாறு.

## மலையகத்திலே.........

எம். வீரன் வயது-30 உப தலைவர் இ. தொ. கா. கதிர்வேல்-25, சி. சின்னையா-25, பீ. கறுப்பையா-8, சி. லாசரஸ் 23, பீ. இராமு-18, பி. ஜெபலெட்சுமி-14. சி. சிங்காரவேலு-35, இ. தொ. கழக உறுப்பினர் சந்திரபோஸ் மகன்-8. பரமேஸ்வரன்-10. தங்கரட்ணம்-40. செல்வநாயகம்-40. சி. பெரியசாமி-40. இ. தொ. கழக உறுப்பினர் — சூரியகாந்தி-14. அ. அண்ணாமலை 55. இ. தொ. கழக உறுப்பினர் அங்கன் கதிர்வேல் 55. இ. தொ. கழக உறுப்பினர்-ச. தோப்படியான் 30. இ. தொ. கழக உறுப்பினர். பெயர் தெரியாத ஒரு பிச்சைக்கார பெண்மணியும் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தார்.

இச் செய்தியை கேள்வியுற்ற இலங்கைத் தொழிலாளர் கழக பொதுச் செயலாளர் திரு. எம். பரராஜசிங்கம், துணைத் தலைவர் திரு. பீ. அ. சின்னத்தம்பி ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து சடலங்களை பார்வையிட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு இறுதி அஞ்சலியையும், அவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்தனர். இந்த மண்சரிவில் முக்கியமாக உயிரிழந்தவர்களில் டியநில்லையிலேயே 15 பேராகும், நான்கு பேர் சூரியகாந்தியிலும் 2 பேர் நடுக்கணக்கு தோட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களின் சடலங்களை தோண்டி எடுக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொண்டர்களும் இணைந்தே சேவை

யில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் விபத்தில் இறந்தவர்களுக்கு நிவாரணம் கோரி அரசாங்க அதிபருக்கு ஒரு மகஜரையும் கழகச் செயலாளர் அனுப்பியுள்ளதாக அறிவித்தார். இதே நேரத்தில் டியநில்ல டிவிசனைச் சேர்ந்த கழகத் தொண்டர் திரு. இராசையா இவ்விபத்தில் தன் அண்ணன் சிங்கார வேலுவையும் அவரது புதல்வன் சந்திரபோஸையும் இழந்து துடித்தமைக்கு தனது ஆழ்ந்த கவலையையும் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொண்டார்.

### சவ அடக்கம்

கண்டெடுக்கப்பட்ட சகல சடலங்களையும் ராஜ மரியாதையுடன் நல்லடக்கம் செய்ய தோட்டத்தின் முகாமையாளர் திரு. தியாகராஜா அவர்களே எல்லா செலவுகளையும் பொறுப்பேற்று செய்தார். சடலங்களை பார்வையிட நாலாப்புறங்களிலும் மக்கள் வெள்ளம் சூழ்ந்து வழிந்து கொண்டிருந்தபடியாலும், தவிர்க்க இயலாத காலநிலை சீர்கேடாலும் குறிக்கப்பட்டபடி 22ந் திகதி வெள்ளிக்கிழமை சவ அடக்கம் நடைபெறவில்லை. திரும்பிய திசையெல்லாம் சோகக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் பிணங்களை தொண்டர்கள் காவல் புரிந்தனர். திட்டமிட்டபடி 23-12-1972, காலை 10 மணிக்கு தோட்ட முகாமையாளர் திரு. தியாகராஜா அவர்களின் தலைமையில் டியநில்லை தோட்ட மைதானத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வெள்ளம் புடைசூழ வரிசை வரிசையாக 17 பிணங்களும் தொண்டர்கள் சுமந்து கொண்டு வர, அணிதிரண்டு வந்த மக்கள் சோக கீதம் பாட சவ அடக்கம் நடைபெற்றது.

இச் சவ அடக்கத்தில் நுவரெலியா அரசாங்க அதிபர், ...காரியாதிகாரி, பொலிஸ், இராணுவ அதிகாரிகளும், இலங்கைத் தொழிலாளர்கழக மாவட்டப் பிரதிநிதிகளான திரு. வ. ஆறுமுகநாதன், திரு. எம். நடராஜமூர்த்தி துணைக் காரியதரிசி திரு. எம். ஆர். கே. காளிமுத்து மற்றும் கழக ஆதரவாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இ. தொ. கா. சார்பில் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ் செல்வச்சாமி, நிதிக் காரியதரிசி எம். கே. விஜயசுந்தரம், இ. தொ. கா. இராகலை மாவட்டப் பிரதிநிதி

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் நாட்டுடனுள்ள கலாசார உறவுகளை அறுத்தெறிய அனுமதியோம்!'



இந்தியாவிலிருந்து தமிழ்த் திரைப்படங்கள் இறக்குமதி செய்வதை முற்றாக நிறுத்த வேண்டும் என்று தேசிய பேரவையில் வெறிக் கூச்சல் கிளப்பியுள்ளார் காலிப் பிரதிநிதி டாக்டர் தகநாயக்கா.

இவருக்குச் சுடச் சுடப் பதிலளித்த காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் தமிழ்த் திரைப்பட இறக்குமதியை தடைசெய்யக் கூடாது; கலைக்கு, கலாசார பரிவர்த்தனைக்கு கட்டுப்பாடு விதிப்பது கூடாது; அதற்குப் பதிலாக தரமான தமிழ்ப் படங்களை இலங்கையில் உற்பத்தி செய்ய அரசு உதவி செய்ய வேண்டும் என்று கூறினார்.

திரு. தகநாயகா பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்.

'சிங்கள நாடான' இலங்கையில் சிங்களப் படங்கள் 20 வீதமே தயாரிக்கப்படுவது வெட்கக்கேடானதாகும். இது நாட்டுக்கு நல்லதல்ல.

தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்ப் படங்களில் அதிகமானவை எம். ஜி. ஆர். படங்களாகும். இந்தப்படங்கள் எமது கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் பாதிப்பவையாக உள்ளன. எம். ஜி. ஆர். நடிக்கும் படங்கள் அனைத்தும் பிரச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும்.

'இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்த் திரைப்படங்களுக்கு முற்றாகத் தடை விதிக்க வேண்டும்.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பெல்மதுளை பா. உ. திரு. தர்மதாச வன்னியாராச்சியும் தமிழ்த் திரைப்பட இறக்குமதியை எதிர்த்துப் பேசினார். அவர் கூறியதாவது:—

தமிழ் படங்களின் இறக்குமதியையும், ஆங்கிலப்படங்களின் இறக்குமதியையும் நிறுத்த வேண்டும். தமிழ்த் திரைப்படங்கள் இனத்துவேஷத்தைத் தூண்டுகின்றன. எமது (சிங்கள) கலை, கலாசாரத்துக்கு விரோதமானவையாகவும் இவை காணப்படுகின்றன. இனவாதத்தைத் தூண்டும் படங்கள் எமக்குத் தேவையில்லை.

இது சம்பந்தமாக காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

''காலித்தொகுதிப் பிரதிநிதி இனத்துவேஷத்துடனும், இந்திய எதிர்ப்புக் கண்ணோட்டத்துடனும் பேசினார். இந்தியத்திரைப் படங்களை மட்டுமே தடைசெய்ய வேண்டுமென்று அவர் கூறினார். சகல வெளிநாட்டுப் படங்களையும் தடைசெய்ய வேண்டும் என்று அவர் கூறியிருந்தால், நாம் அவரது வாதத்லைத ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் புரிந்து கொண்டிருப்போம். ஆனால் இந்திய படங்களுக்கு எதிராகவே குறுகிய நோக்கத்துடன் அவர் பேசுகிறார்.

தமிழ் படங்கள் மட்டுமே நாட்டில் ஒழுக்கக் குறைவை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கு தயாரிக்கப்படும் சிங்களப்படங்களும் தாம் ஒழுக்கக் குறைவை ஏற்படுத்துகின்றன. வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற லேபலுடன் பச்சை ஆபாசமான ஆங்கிலப்படங்களும் வருகின்றன. இவை பற்றி தகநாயகா கவலைப்படவில்லை. தமிழ் படங்களையே பார்த்திருக்கமாட்டாத காலிப் பிரதிநிதி அவை ஒழுக்கக் குறைவையும் இனவாதத்தையும் தூண்டுகின்றன என்று கூறுவது விஷமத்தனமானது.

''இங்கு தயாரிக்கப்பட்ட குத்துவிளக்கு, வெண்சங்கு படங்களை எடுத்தவர்கள், இனித்தமிழ்த்திரைப்படங்களை எடுக்கமுடியாத அளவிற்குத்தோல்வி கண்டுள்ளனர். இதற்குக்காரணம் மக்களின் விருப்பத்துக்கு அமைய அவை இல்லாமல் போனதுதான். எனவே, உள்ளூரில் நல்ல தரமான தமிழ்ப்படங்களை எடுப்பவர்களுக்கு அரசு உதவி செய்ய முன் வரவேண்டும்.

''மக்கள் நல்ல, தரமான படங்களைத்தான் பார்க்க விரும்புவார்கள் — தமிழ் பட இறக்குமதியைத் தடை செய்யக்கூடாது. கலைக்கு, கட்டுப்பாடு விதிக்க முன் வராதீர்கள்.

''கலை, கலாசாரம், மொழியினால், நாம் தமிழ் நாட்டுடன், தொடர்பு கொண்டுள்ளோம். இத் தொடர்பை அறுத்தெறிய நீங்கள் முயலக்கூடாது.

திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் தமிழ், இலக்கிய நாடகத் துறையில் ஈடுபாடுள்ள ஒருவரை இயக்குனராக நியமிக்க அரசு முன்வரவேண்டும்.

திரைப்படங்கள் தென் இந்தியாவிலிருந்து வருகின்ற படியால், அதனைத் துவேஷக்கண்ணுடன் பார்க்கக்கூடாது.''

# தமிழ்ப் பகைவர்கள் மீண்டும் தலையெடுக்கப் பார்க்கிறார்கள்!

## தன்மானத் தமிழ்க்குலமே எச்சரிக்கை! எச்சரிக்கை!!

வெள்ளம் போல்
தமிழர் கூட்டம்
வீரர்கொள்
கூட்டம் அன்னார்
உள்ளத்தால்
ஒருவரே

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பாடியது போல்—ஈழத் தமிழ்த்தேசிய இனம்—சாதி பேதங்களைக் கடந்து—கட்சி பேதங்களைக் கடந்து—பிரதேச பேதங்களைக்கடந்து—வர்க்கபேதங்களைக் கடந்து—மதவேறுபாடுகளைக் கடந்து—ஒரே அணியில், ஒரே தலைமையில், ஒரே 'இலட்சியத்தின் கீழ் 'தமிழர் கூட்டணியாக' ஒன்று திரண்டுள்ளது.

மொழியடிப்படையில்—இன அடிப்படையில் விடுதலைக் கோரிக்கையை முன் வைத்து—இன்று போல் வரலாற்றில் முன் எப்பொழுதும் தமிழ் மக்கள் ஒன்று திரண்டதில்லை.

இந்த ஒற்றுமையைக் கண்டு மாற்றார் குமுறுகின்றனர் — உறுமுகின்றனர் — திகைத்துப்போய்க் கிடக்கின்றனர்.

இந்த ஒற்றுமையை எப்படியும் உடைத்தே தீருவது கொண்டு வேலை செய்து வந்த தமிழர் பகை அணிகள் மலையுடன் மோதி மூக்கு உடைபட்டதுபோல் முதுகெலும்பு முறிந்து கிடக்கின்றன இன்று!

தமிழர் ஒற்றுமையை சிதைக்க முயன்ற தமிழ் பகை ஏடுகள் தமிழர்களால் ஒதுக்கப்பட்டு, காறியுமிழப்பட்டு, திக்கிரையாக்கப்பட்டு, சாக்கடையுள் வீசப்பட்டுள்ளன.

தமிழர்களின் தேசிய எழுச்சிக்கு—விடுதலையுணர்ச்சிக்கு எதிராக எழுதினால் தமிழர்கள் மத்தியில் தங்கள் ஏடுகளுக்கு விலை போகாது என்பதை மாற்றார் உணர்ந்தனர்!

அதனால்தான் — தினபதியார் சில காலம் வாலைச் சுருட்டிக் கொண்டு இருந்தார்.

ஆனால் சந்தர்ப்பம் நேரும் போது — ஒரு சின்னப்பிடிகளின் ஒற்றுமையை—தமிழர் கூட்டணியை சிதறடிப்பதுதான் தமிழ்பகை ஏடான தினபதியின் ஒரே நோக்கம் என்பதை நாவலர் விழாவை யொட்டிய தமிழர்கூட்டணி தீர்மானத்தை வைத்துக் கொண்டு அந்த ஏடு வெளியிட்ட செய்திகள் தெளிவாக காட்டி விட்டன.

ஆம்., தமிழர்கள் கொஞ்சம் அயர்ந்தால் — சிறிது கவனக்குறைவாக இருந்தால் — தமிழர்களை பிளவு படுத்துவதுதான் தமிழ்ப் பகைவர்களின் ஒரே நோக்கமாகும்.

நாவலர் விழாவை யொட்டி தமிழர் கூட்டணி என்ன கூறியது?

வீரசிங்கம் மண்டபத்தில் ஆறுமுக நாவலர் சபை [illegible] நாவலர் விழாவைப் பகிஷ்கரிக்கும்படி கூறியதா?

கிடையவே கிடையாது! வா உட்படத் தமிழர்கூட்டணித் தலைவர்கள்பலரும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

நாட்டில் ஆங்காங்கே நடைபெற்ற நாவலர் விழாக்கள் எதையாவது பகிஷ்கரிக்கும்படி தமிழர் கூட்டணி கேட்டதா? கிடையவே கிடையாது!

அப்படியானால் தமிழர் கூட்டணி என்ன கூறியது?

நல்லூரில் சிங்கள அரசு எடுத்த நாவலர் விழாவைத் தான் பகிஷ்கரிக்கும்படி தமிழர் கூட்டணி தமிழ் மக்களைக் கேட்டது. அமைச்சர்கள் கலந்துகொள்ளும் வைபவங்களைப் பகிஷ்கரிக்கும் படிதான் தமிழர் கூட்டணி கேட்டது.

இதில் என்ன தவறு உண்டு பிழை உண்டு?

இந்த அரசு நாவலர் கண் போலகாத்த சைவமதத்தை அவமதித்த அரசு; தமிழை பௌத்தத்தை மட்டுமே அரசாங்க மதமாக்கியுள்ள அரசு! தமிழ் மக்களிடம் சிங்களத்தையும் பௌத்தத்தையும் திணிக்கும் அரசு!

இந்த அரசு நாவலர் பெயரால் கலாசார நிலையம் நிறுவப் போகிறதென்றால் அதுவெறும் கண் துடைப்புத்தான்!

வீடு — சொந்த வீடு — வேண்டும் என்று கேட்பவனைப்பார்த்து — வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டவன், இந்தா ஒரு பிள்ளையார் படம், இதை நீ வைத்துக் கொள் என்று கொடுப்பது போலத்தான் நாவலர் கலாசார நிலையத்தை நிறுவி தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறது..

ஆட்சியுரிமை வேண்டும்—அரசியல்சட்டரீதியாகமதத்துக்கு பாதுகாப்பு வேண்டும் —மொழிக்கு உரிமை வேண்டும் என்று கேட்கும் தமிழினத்தை ஏமாற்றப்பார்க்கிறது சிங்கள அரசு!

இந்த ஏமாற்று வித்தையில் தமிழினம் ஏமாறக் கூடாது —அமைச்சர்கள் வருகையை எதிர்க்க வேண்டும் என்று கேட்பது எப்படித் தவறாகும்?

அமைச்சர்கள் விஜயத்தைப் பகிஷ்கரிப்பதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஜி. ஆர். எதிர்ப்பினால் கழக ஆட்சி கவிழுமா?

## தமிழக அரசியல் நிலை பற்றி 'பிரீபிரஸ் ஜெர்னல்' விமர்சனம்!

தமிழக அரசியல் நிலைபற்றி பம்பாயிலிருந்து வெளிவரும் 'பிரீபிரஸ் ஜேர்னல்' எனும் ஆங்கில ஏடு எழுதியிருந்த அரசியல் விமர்சனம் இது:-

தமிழ்நாட்டு அரசியல் மிகுந்த வெப்பமாக இருந்தாலும் அண்மைக் காலத்து நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கும் யாரும் கருணாநிதி தலைமையிலமைந்துள்ள அமைச்சரவை தேர்ந்தெடுக்கப்பட்ட முழுமையான காலத்திற்கும் அதாவது 1976 வரை நிச்சயம் நீடித்திருக்கும் என்பதனைத் தெளிவாக உணர்வர்.

கருணாநிதி அரசு நீடித்திருப்பதை எதிர்த்து எம். ஜி. ராமச்சந்திரன் துவக்கியிருக்கும் புதிய போராட்டம் மத்தியத் தலைமையின் அனுதாபத்தையோ அல்லது ஆதரவினையோ பெற முடியவில்லையாகையால் எந்தவித விளைவுகளையும் ஏற்படுத்திடப் போவதில்லை.

எம். ஜி. ஆர். தமது தி. மு. க. ஆட்சி எதிர்ப்புப் போராட்டத்திற்கு மத்திய அரசு துணை நிற்கும் என்று பெரிதும் நம்பினார்; ஆனால் பரிதாபத்திற்குரிய வகையில் ஏமாந்து போய்விட்டார்.

மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் சில மாதங்கட்கு முன்-பாண்டிச்சேரி இடைத் தேர்தல் முடிந்தவுடன் தி. மு. கவிலிருந்து சட்ட மன்ற உறுப்பினர் கட்சித் தாவலால் கருணாநிதி அமைச்சரவை கவிழும் என்று ஆருடம் கணித்தார். இந்த மாதிரிக் குழப்பத்திற்கு இந்திரா காந்தி இசையவில்லை. ஆகையால் குமாரமங்கலம் தனது போக்கை மாற்றிக்கொண்டுள்ளார்.

அவரே இப்பொழுது, ஒரு வாரத்திற்கு முன்பு ஜனநாயக அமைப்பில் பெரும்பான்மை ஆதரவினைப் பெற்றுள்ள ஒரு அரசாங்கத்தைச் சரியான காரணங்களின்றிக் கவிழ்த்திட முடியாது என்று எச்சரிக்கையாகவும் பக்குவமாகவும் பேசி இருக்கிறார்.

வெவ்வேறு இலட்சியங்களைக்கொண்ட காங்கிரஸ் கட்சியும், அ. தி. மு. க. வும் எப்படி நெருங்கி உறவு கொண்டிட முடியும் என்ற கேள்வியின் மூலம் அவர் காங்கிரசை-நெருங்க முயன்றுகொண்டிருக்கும் எம். ஜி. ஆரைக் கேலி செய்திருக்கிறார்.

எம். ஜி. ஆர். இன்னும் தனது கட்சியின் கொள்கைகளையும், பொருளாதாரக் கோட்பாடுகளையும் தெளிவுபடுத்திடவில்லை என்றும் மோகன் குமாரமங்கலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமீபத்தில் நடந்த மதுரை மாநாட்டிலும்கூட எம். ஜி. ஆர். மத்திய அரசைக் கடுமையாக விமர்சித்தார். இப்பொழுது தி. மு. க. அமைச்சரவை மீது விசாரணை வேண்டும் என்று தனது கோரிக்கைக்கு இணங்கிடத் தவறினால் மத்திய அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்திடப் போவதாக வேறு அச்சுறுத்தியுள்ளார்;

அ. தி. மு. க. இரண்டாகப் பிரிந்து ஒரு பிரிவு காங்கிரஸ் கட்சியோடும், மற்றொன்று தி. மு. க. வோடும் இணைந்துவிடும் என்று காமராசர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டு ஆளுநர் கே. கே. ஷா, கருணாநிதி அமைச்சரவை நிலையானதாகுமென்றும், இப்போதோ எதிர்காலத்திலோ அதற்குக் குந்தகம் ஏற்படுத்திடக்கூடாதென்றும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மத்தியத் தலைமை ஆளுநரின் கருத்துகளை முழுமையாக ஒத்துக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

234 உறுப்பினர்கள் கொண்ட சட்டப்பேரவையில் 174 தி. மு. க. உறுப்பினர்கள் 6 முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் தவிர சுயேச்சை உறுப்பினர்கள், தமிழரசுக் கழகம், பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் கருணாநிதிக்குப் பக்கபலமாக உள்ளன.

தி. மு. க. வில் பிளவு ஏற்பட்டதற்குப் பின் முதல் பலப் பரிசோதனை சென்னை மாநகராட்சி மேயர் தேர்தலில் மேற்கொள்ளப்பட்டது.

கழக வேட்பாளர் தி. மு. க. குழு அல்லாத கட்சிகளின் வாக்குகளையும் பெற்று மிகப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றார்.

தி. மு. க. வேட்பாளர் 17 அதிக வாக்குகளுடன் 74 வாக்குகள் பெற்று வென்றார்.

இந்தத் தேர்தல் கழகத்தில் சரிவு இல்லை என்பதற்கும், பழைய காங்கிரஸ் மட்டுமே தி. மு. க. வின் எதிர்க் கட்சி என்பதற்கும் சரியான சான்றாகும்.

அ. தி. மு. க. அமைக்கப்பட்டவுடனேயே மறைந்து போயிருக்கும்; ஆனால் இந்திய கம்யூனிஸ்டு கட்சி தமிழ் நாட்டில் தனது பலத்தைப் பயன்படுத்த முனைந்துள்ளது; அரசியல் நிர்க்கதரிசனமோ, பக்குவமோ, தெளிந்த அறிவோ எதுவுமில்லாத எம். ஜி. ராமச்சந்திரன், இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்களால் வழிநடத்திச் செல்லப்படுகிறார்.

முன்யோசனை ஏதுமின்றி எம். ஜி. ஆர். கம்யூனிஸ்ட் வலையில் வீழ்ந்து விட்டார். இம்மாதத் துவக்கத்தில் சென்னையில் நடைபெற்ற ஊர்வலத்திற்கு ஏற்பாடுகள் செய்து உதவியவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள்தான். எம். ஜி. ஆரை டெல்லிக்கு அழைத்துச் சென்று ஜனாதிபதியிடம் மனு கொடுக்கச் செய்தார். கல்யாணசுந்தரம் மத்தியிலுள்ள தலைவர்களை டெல்லியில் தனித்தனியே சந்தித்திருக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நேரத்தில் கம்யூனிஸ்டுகள் முன்னுக்கு வந்தது எம். ஜி. யாரை பின்னுக்குத் தள்ளி விட்டது. மேலும் எம். ஜி. யாருக்குள்ள சொந்தச்செல்வாக்கினை கல்யாணசுந்தரமும் அவரைச்சார்ந்தவர்களும் பயன்படுத்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கம்யூனிஸ்டுகள் தற்போது எம். ஜி. ஆருக்குக் கொடுக்கும் ஆதரவு ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. கம்யூனிஸ்டு மார்க்சிஸ்ட் தலைவர் ஏ. கே. கோபாலன் குறிப்பிட்டுள்ளபடி இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நோக்கம் ஜனநாயக ரீதியாக கொள்கை ரீதியான முறைப்படுத்தப்பட்ட எதிர்ப்பினைக் கொடுப்பதல்ல; அ. தி. மு. க. வை காங்கிரஸோடு உறவு கொள்ளச் செய்வதே யாகும். இப்பொழுது காங்கிரஸ் நடுநிலை வகித்து வருகிறது. இந்தியக் கம்யூனிஸ்டு எம். ஜி. யாரின் போராட்ட அணுகு முறைகளின் மூலம் பலனடைய முயன்று வருகிறார்கள்.

இக்கட்டான நிலையில் எம். ஜி. ஆர். இருக்கிறார், தி. மு. க. விற்கெதிராக அவர் கூறும் ஊழல் குற்றச் சாட்டுகளை தமிழ்நாட்டு மக்கள் பெரிது படுத்தப் போவதில்லை.

காரணம் இதே எம். ஜி. ஆர்தான் மூன்று மாதங்களுக்கு முன்பு தி. மு. க. மாநாடு ஒன்றில் 76 தேர்தலுக்கு முன் ஜனநாயக ரீதியாக முறையாக அமைக்கப்பட்ட தி. மு. க. அரசைக் கவிழ்த்திட மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் பொருளற்றது என்று பேசி இருக்கிறார்.

இந்த மாதிரியான சூழ்நிலைகளில் இப்போது கருணாநிதி அமைச்சரவைக்கு எந்த வித அச்சுறுத்தலும் கிடையாது; மத்தியத் தலைமை எச்சரிக்கையாக இருக்கிறது. காமராசர் பொறுமையாக இருக்கிறார். கருணாநிதி கட்சியை முழுமையாகப் பாதுகாத்திருக்கிறார்; சட்ட மன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப்பெற்றிருக்கிறார்.

அலைகளும் காற்றும் திறமை மிக்க கப்பலோட்டிக்கே உதவியாய் இருக்கும் என்ற முதல்வர் கருணாநிதியின் கூற்றில் நியாயமிருக்கிறது.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்று பேரவைத்தலைவரால் திடீரென ஒத்திவைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டத்தில் நான் பார்வையாளனாக இருந்தேன்.

கருணாநிதிகட்டுப்பாடான முறையில் தமது கட்சிக்காரர்களை வைத்திருந்தது கண்டு வியந்து போனேன்.

தி. மு. க. அரசுக்கெதிரான குற்றச்சாட்டுகளை அ. தி. மு. க. வைச் சேர்ந்த எம். ஜி. ஆரும் பிறரும் வீசிய போது, தி. மு. க. உறுப்பினர்கள் உணர்ச்சியோடும் கோபத்தோடும் பதிலுரைக்க எழுந்தனர்.

ஆனால் கருணாநிதி தமது உறுப்பினர்கள் தங்கள் இடத்திலிருந்து எழுந்திருக்க வேண்டாம் என சைகை காட்டினார்; அவரது உறுப்பினர்கள் அமைதியாயினர். அவர்கள் பொறுமையாயிருந்து அவையின் கௌரவத்தைக் காத்தனர்.

---

## எம். ஜி. ஆர். கிளர்ச்சிகளினால் தி. மு. கழக அரசு அசையவில்லை!

### 'ஸ்டேட்ஸ்மன்' ஏடு எழுதுகிறது!

("அபாயகரமான திசை மாற்றம்" என்ற தலைப்பில் டில்லியிலிருந்து வெளியாகும் ஸ்டேட்ஸ்மேன் ஏடு 22-11-72-ஆம் தேதிய இதழில் தீட்டியுள்ள தலையங்கம் இங்கே தரப்படுகிறது.)

சென்னையில் நடந்த தம் கட்சியின் ஆர்ப்பாட்டமும் நவம்பர் பத்தாம் தேதி தமிழ்நாட்டில் நடந்த ஆர்த்தாலும் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு டில்லியையும் அச்சுறுத்தும் அளவுக்கு ஊக்கமளித்திருப்பதாகத் தெரிகிறது. செய்யாறு கூட்டத்தில் பேசிய அவர், டில்லியானது திரு. கருணாநிதி அமைச்சரவைமீது சாட்டப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க கமிஷன் நியமிப்பதில் தாமதம் காட்டுமானால் தம்முடைய போராட்டமானது டில்லியை நோக்கித் திரும்பும் என்று கூறியிருக்கிறார்.

மாநில சுயாட்சிக் கோரிக்கையில் தாம் உண்மையிலேயே அக்கறையுடையவரே என்பதை வெளிக்காட்டிட முயன்ற எம். [illegible] சந்திரன் குடியரசு[illegible]ரிடம் தாம் கொடுத்த புகார் மனுவின் பேரில் தாம் எதிர்பார்த்தபடி விளைவுகள் உண்டாக்கவில்லை என்பதறிந்து தமக்கேற்பட்டுள்ள எரிச்சலையும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். குடியரசுத் தலைவரிடத்தில் மனுவைக் கொடுத்த பின்னர் ஒன்றை இவர் ஒப்புக்கொண்டார்: 'குடியரசுத் தலைவரிடம் கொடுத்த மனுவை அவர் என்ன செய்யவேண்டுமென்று கூறி கால்கெடு போடுவது முறையானதல்ல' என்று அவரே கூறினார். இப்போது "அவர் பொறுமையை இழந்துவிட்டாரென்று தெரிகிறது.

இதற்கொரு காரணம் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியை யொட்டி காங்கிரஸ் கட்சி கட்டிக்காத்து வரும் அணுகுமுறையாகும். தமிழ்நாட்டின் நிலைமையில் மத்தியத் தலையிடு கூடாது என்றும் தமிழ்நாட்டு நிலைமை முழுக்க முழுக்க ஒரு கட்சியின் உள் விவகாரம் என்றும், எனவே தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை அரசி[illegible] இல தனி மனிதர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியே என்பதால் தலையிட்டுக்கு இடமில்லாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று மத்தியிலிருப்போர் விவேகத்தோடு தீர்மானித்தனர்.

எம். ஜி. ராமச்சந்திரனது பொறுமையின்மைக்கு மற்றொரு காரணம்: தி. மு. கழக வேட்பாளரான ஆர். ஆறுமுகம் சென்னை மாநகரத் தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். கணிசமான எண்ணிக்கையில் கவுன்சிலர்கள் தம்பக்கத்துக்கு வந்துவிட்டதாக எம். ஜி. ராமச்சந்திரன் கூறிக்கொண்ட பின்னரும் இப்படி நிகழ்ந்துள்ளதால் தி. மு. கழகம் தமிழகத் தலைநகரான சென்னையில் முன்னைக்காட்டிலும் வலிவோடு தன்னை உறுதிபடுத்திக் கொண்டுள்ளது. பத்துக்கும் குறைவான எம். எல். ஏக்களே அவர் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

திரு. ராமச்சந்திரன் தெருக்களிலே நடத்திக் காட்டிய காட்சிகளும், ஆர்த்தால்களும் பந்துகளும் தி. மு. கழகத்தைப் பொறுத்த மட்டில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதையும் உருவாக்கிடவில்லை. புதுடில்லியிடத்தில் ராமச்சந்திரன் கொண்டுள்ள எரிச்சலைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை.

எப்படி, எதைச் செய்தாவது — கருணாநிதி அரசை பதவியிலிருந்து இறக்குவதே அவரது நோக்கமாகும். கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையினுடைய முழு ஆதரவும் தவழும் நிலையில் உள்ள தன் கட்சிக்குக் கிடைத்துள்ளது என்பதால் டில்லியின் ஆசிர்வாதத்தோடு தன் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கொடுத்த புகார் மனுவை திரு. கருணாநிதிக்கே அனுப்பிடுவது என்று பிரதமர் எடுத்த முடிவானது இவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையே அளித்திருப்பதாகத் தெரிகிறது.

---

### நெடுங்கேணி கிராமசபை கலைக்கப்படும்?

வவுனியா வடக்கு—மேல் பற்றுக்கிழக்கு, நெடுங்கேணி கிராம சபை ஜனவரியில் கலைக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

இக்கிராம சபைக்கான தேர்தல் ஏப்பிரல் மாதத்தில்—அல்லது மே மாதத்தில் நடைபெறும் எனவும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசூரியருக்கு அடிக்குமேல் அடி! இடிக்குமேல் இடி!

## தமிழர் கூட்டணி பா. உ.க்கள் சூடச் சூடக் கொடுத்தனர்!

தபாலமைச்சர் குமாரசூரியரின் தபாலமைச்சு மானியம் மீது தேசிய பேரவையில் உரையாற்றிய தமிழர் கூட்டணி பா. உ.க்களான திருவாளர்கள்: பண்டிதர் இரத்தினம், வி. தர்மலிங்கம், க. துரைரத்தினம், வி. என். நவரத்தினம், வி. ஏ. அழகக்கோன் ஆகியோர், அமைச்சருக்கு தங்கள் பேச்சில் அடிக்குமேல் அடி, இடிக்கு மேல் இடி கொடுத்தனர். தமிழர் கூட்டணி பா. உ.க்களின் கடுமையான தாக்குதலுக்காளான குமாரசூரியர் தலை குனிந்தபடி அமர்ந்திருந்த காட்சி பரிதாபமாக இருந்தது.

என்னை தபாலமைச்சராக நியமித்தது தவறு என்றால், அதற்கு என்னை ஏன் கண்டிக்கிறீர்கள்? பிரதமரிடம் முறையிடுங்கள் என்று தபாலமைச்சர் அழமாட்டாக் குறையாக அங்கு தெரிவித்தார்.

தேசிய பேரவையின் குறிப்பேடு வெளி வந்ததும் தமிழர்கூட்டணி பா. உ.க்களின் பேச்சு முழுவதும் சுதந்திரனில் வெளியிடப்படும்.

தேசிய அரசப் பேரவையில் அஞ்சல் தொழிற் தொடர்பு அமைச்சின் வாக்குப் பண விவாதத்தின் போது தமிழ்அரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்கள் தபாற் தொழில் தொடர்பு அமைச்சருக்கு அடிக்குமேல் அடியும் பேரிடிக்குமேல் பேரிடியாகவும் அமைந்து விளங்கின.

நிலைபதியின்புரட்டுமொழியிற் கூறுவதாயின், காவலூர் பாராளுமன்ற உறுப்பினர் தமிழுரிமை பற்றிப் பேசிய பேச்சுக்கள் திரு. குமாரசூரியருக்கு தலையிடி கொடுத்ததாகவும், முகத்தில் அறைந்தது போலவும் அமைந்தன.

கொழும்பு அஞ்சல் நிலையத்திலும் வெள்ளவத்தை அஞ்சல் நிலையத்திலும் தமிழில் தந்தி அனுப்புவதற்கும், தமிழில் முகவரியிட்ட பதிவுத் தபாலை ஏற்று தமிழில் பற்றுச் சீட்டு கொடுப்பதற்கும் நாங்கள் ஒழுங்கு செய்வித்தோம். போராடியே இதைச் செய்தோம். ஆனால் இப்பொழுது இந்த அஞ்சல் நிலையங்கள் பதிவுத் தபால் பற்றுச் சீட்டை தமிழில் கொடுக்க மறுக்கின்றன என பண்டிதர் இரத்தினம் கூறினார்.

திரு. குமாரசூரியருக்கு முன்னர் தேசிய பேரவையில் இதைச் சுட்டிக் காட்டிய போது, தமிழில் பற்றுச் சீட்டு முன்னர் கொடுக்கப் பட்டதென்பதை திரு. இரத்தினம் நிரூபிப்பாரா என்று பிரச்சினையைத் தட்டிக் கழிக்கும் முறையில் அமைச்சர் ஒரு சவால் விட்டுப் பார்த்தார்.

திரு. இரத்தினம் அவர்கள் தமது பேச்சில் இதோ வெள்ளவத்தை அஞ்சல் நிலையம் கொடுத்த தமிழ் பற்றுச் சீட்டு என்னிடம் உள்ளது. அமைச்சருக்குக் காட்ட ஆயத்தமாக இருக்கிறேன் என்று அமைச்சரது முகத்தில் அறைந்தாற் போல் பேசினார். அதை வாங்கிப் பார்க்கக்கூட அமைச்சருக்கு துணிவில்லைப் போலும்!

## லீலா சித்திர நாள் காட்டி ஒரு பல்கலைக்கழகம்!

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று கூறினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அதே போல நல்ல நாள் காட்டியும் ஒரு பல்கலைக்கழகம்தான் என்றுகூற வைக்கின்றது லீலா சித்திர நாள் காட்டி.

வரலாறு, சோதிடம், விஞ்ஞானம், சமயம், இலக்கியம், அரசியல், போன்ற பல வேறு துறைகளினதும் தொகுப்பாக 1973-ம் ஆண்டுக்குரிய லீலா சித்திர நாள் காட்டி விளங்குகிறது!

இரகுநாத ஐயரின் வாக்கிய பஞ்சாங்கப்படி கணிக்கப்பட்டுள்ள லீலா சித்திர நாள் காட்டியில் திதி, நட்சத்திரம், சுபநேரம், ராகு காலம் போன்ற பஞ்சாங்க விபரங்கள் அனைத்தும் சரியாகத் தரப்பட்டுள்ளதுடன், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த சமயத்தவரின் முக்கிய தினங்கள், விரத நாட்கள், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நிகழ்ந்த வரலாற்றுநிகழ்ச்சிகளின் திகதிகள், அரசியல் முக்கிய சம்பவங்கள், விஞ்ஞான மேதைகளினதும் அரசியல், மதத் தலைவர்களினதும் பிறந்த, இறந்த தினங்கள் போன்றவைகள் படத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய ஒரு நாள்காட்டியை—அதுவும் சித்திர நாள் காட்டியை தயாரிப்பதற்கு எவ்வளவு ஆராய்ச்சியும், பொறுமையும் இருக்கவேண்டும்? மக்களின் அறிவை வளர்க்கும் நோக்குடன் லீலா சித்திர நாள் காட்டியை தயாரித்து வெளியிட்டு வரும் நியூ லீலா அச்சக அதிபர் திரு. சு. த. சின்னத்துரை ஜே.பி. அவர்களுக்கு தமிழினம் என்றும் கடமைப்பட்டுள்ளது. தமிழர் இல்லந்தோறும் அலங்கரிக்க வேண்டியது லீலா சித்திர நாள் காட்டி.

### லீலா — நாள் குறிப்பேடுகள்

**லீலா டெஸ்க் டயறி**

அழகான தாளில், இரு நாட்களுக்கு ஒருபக்கம் ஒதுக்கப்பட்டு, கையடக்கமான முறையில் வெளியிடப்பட்டுள்ள லீலா டெஸ்க் டயறியில், விடுமுறை நாட்கள், அரசாங்க விபரங்கள் தபால் தந்தி காசுக்கட்டளை விபரங்கள், இ. போ. ச. விபரங்கள், போன்ற அவசியமான தகவல்கள் அனைத்தும் தரப்பட்டுள்ளன.

**லீலா பஞ்சாங்க தினக் குறிப்பு**

'போக்கட் சைஸில்' அழகான பிளாஸ்டிக் உறையுடனும் பென்சிலுடனும் வெளியிடப்பட்டுள்ள லீலா பஞ்சாங்க தினக் குறிப்பில், திதி, நட்சத்திர, சுபநேர விபரங்கள் ஒவ்வொரு நாளும் தரப்பட்டுள்ளன. அத்துடன் அரசாங்க விபரங்கள், விடுமுறை தினங்கள், இலங்கையின் முக்கிய சம்பவங்கள், 32 அறம், 64 கலை, தபால் தந்தி விபரங்கள், இந்தியாவுக்கு கடிதம் எழுதுவோர் கவனிக்கவேண்டிய விதிமுறைகள் அனைத்தும் தரப்பட்டுள்ளன. கையடக்கமானது.

**லீலா தினக் குறிப்பு (சிறியது)**

பிளாஸ்டிக் உறையும் பென்சிலும் கூடிய லீலா தினக்குறிப்பில் ஒரு பக்கம் இருநாட்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்க விபரங்கள், விடுமுறை நாட்கள், தபால் தந்தி விபரங்கள், ஆகியவற்றுடன், இந்து இஸ்லாமிய கிறிஸ்தவ தினங்களும் தரப்பட்டுள்ளன.

நியூ லீலா அச்சகத்தினர், லீலா மாத நாள்காட்டியையும், லீலா பஞ்சாங்க மாத நாள் காட்டியையும் வெளியிட்டுள்ளனர்.

## தி. மு. கழகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதைத் தொடர்ந்து பலத்த எதிர்ப்புக்களும் ஆர்ப்பாட்டங்களும் எழுந்தது. தற்போது தமிழகயானவர் அரசுக்கு எதிராக கிளர்ச்சிகள் செய்துவருகின்றனர்.

'இந்தியாவில் இலஞ்ச ஊழல் இல்லாத மாநிலமே இல்லை. மத்திய அரசிலும் இலஞ்ச ஊழல் இருப்பது தெரிந்த விடயமே. இலஞ்ச ஊழலை அழிக்கும் நோக்கத்தில் தமிழகத்தின் எதிர்கால முன்னேற்றத்தைப் பற்றியும் நாம் மறந்து விடக்கூடாது. தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவு தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு தமிழனின் நல்வாழ்வையும் பாதிக்கப் போகின்றது. இதன் விளைவுகளைத் தமிழர்களுக்கு எதிராகவே தமிழர்களின் எதிரிகள் பயன்படுத்துவார்கள் என்பதை ஒவ்வொரு வினாடியும் நாம் சிந்திக்கவேண்டும்.

தமிழகத்திற்கு வெளியே வாழ்கின்ற தமிழர்களின் எதிர்கால நல்வாழ்வும் தி.மு.க. வின் பலத்திலேயே தங்கியுள்ளதென்பதை வெளிநாட்டுத் தமிழர்களும் உணர வேண்டும்.

'கழகத்தில் ஏற்பட்டிருக்கும் பிளவை அகற்றி ஒற்றுமையை நிலைநாட்டவேண்டிய சீரிய பொறுப்பு பெரியார் ஈ. வெ. ரா, சிலம்புச் செல்வர் மா. பொ. சி., ஈழத் தமிழ்த் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், குன்றக்குடி அடிகளார் போன்ற தமிழ்த் தலைவர்களையே சாரும். தி. மு. க. வின் அரசியல் வாதிகள் அனைவரும் ஒன்றுகி கழகத்தின் ஒற்றுமையான எதிர்காலத்துக்கு திட்டமிட்டு செயல்பட வேண்டும்.'

—இவ்வாறு 'இலண்டன் முரசு' எழுதியுள்ளது.

## நாவலர் பெய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நா. உறுப்பினர் அவர்கள் தலைமை தாங்கிய நேரத்திலேயே இவ்விடயம்பற்றிய முடிவு எடுக்கப்பட்டது. அப்போது திரு. நேசையா சமூகமாயிருக்கவில்லை.

தொண்ணூறு வீதம் சைவர்களைக்கொண்ட தமிழர் கூட்டணியின் முடிவு ஓர் கிறீஸ்தவர் தலைமை தாங்கினார் என்ற காரணத்தினால் கிறீஸ்தவர்களுடைய முடிவாக மாட்டாது என்பதைக் கூறும் அதேநேரத்தில், இச் சந்தர்ப்பத்தில் ஓர் அசல் சைவனான பண்டிதர் இரத்தினமே தலைமை தாங்கினார் என்ற உண்மையை மக்களுக்கு கூறுவது என் கடமையாகிறது.

நாவலர் சிலை நிறுவப்பட்ட நேரத்தில் நாவலரைச் சாதித்திமிர் பிடித்தவரென்றும் பிற்போக்குவாதியென்றும் வர்ணித்த சில தோழர்கள் இன்று அவரைத் தமது தேவைக்குப் பயன்படுத்துகிறார்கள். இது அவர்களுக்கு வழமையானதே. அரசாங்க விழாவாக நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் குமாரசூரியர் ஆற்றிய உரை என்ன நோக்கு நோக்கத்திற்கு நாவலர் பெயரைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தெளிவாக்குகின்றது.

—இவ்வாறு தமிழர் கூட்டணி தலைமைச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## டியநில்லை தோட்டத்....

4ம்- பக்கத் தொடர்ச்சி

திரு. கே. பி. எஸ். துரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இறுதியில், இவ்விபத்தில் சிக்கியவர்களின் சடலங்களை கண்டுபிடிக்க இரவு பகல் என்று பாராது அரும் பெரும் தொண்டாற்றிய தோட்ட முகாமையாளர் திரு. தியாகராஜா உதவி அத்தியட்சகர்கள் திரு திரு. ஆசீர்வாதம், திரு. ஜெயவிக்கிரம ஆகியோருக்கு நன்றி கூறும் மகஜர் ஒன்று பத்திரிகை நிருபர்களுக்கு கழக மாவட்டப் பிரதிநிதி திரு. வி. ஆறுமுகநாதன் அவர்களால் கையளிக்கப்பட்டது.

மேலும், மண்சரிவில் மாண்டவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இரங்கல் மாவட்டக்குழு பிரார்த்தனை ஒன்றை மேற்கொண்டது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு நிவாரணம் கோரி பாராளுமன்றத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டமைக்காக கழகம் அரசாங்கத்துக்கு தனது நன்றியை இத்தால் கூறுகின்றது. விபத்தில் சிக்கி பலியானவர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத்தர நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. வி. என். நவரட்ணம், திரு. அ. தங்கத்துரை ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பலியானவர்களின் ஞாபகார்த்த சின்னமாக சமாதி கட்ட முன்வந்த தோட்ட முகாமையாளர் திரு. தியாகராஜா அவர்களுக்கு இ. தொ. கழகம் தன் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றது. அத்துடன் சில பத்திரிகைகள் இந்த மண் சரிவில் பிழையான தகவல்களை தெரிவித்தமைக்காக கழகம் ஆட்சேபனை தெரிவிப்பதோடு அதற்காக வருந்துகின்றது.

**மரணச்சடங்கில் இ. தொ. கழகம்.**

22ந் திகதி நிர்ணயித்த மரணச்சடங்கில் இ. தொ. கழக சார்பில் மலர் வளையங்களை தாங்கிக்கொண்டு இரங்கல் மாவட்டப் பிரதிநிதி திரு. ஆறுமுகநாதன், துணைப் பிரதிநிதிகள் திருவாளர்கள்:- எம். நடராஜமூர்த்தி, கே. விஸ்வநாதன், மாவட்டத் துணைச் செயலாளர் எம். ஆர். கே. காளிமுத்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர் திரு. கனகசபாபதி, முன்னாள் இ. தொ. கழகத் துணைச்செயலாளர் திரு. கே. பி, செல்வத்துரை மற்றும் தோட்ட உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் மௌனமாக ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். பிரக்கணக்கானோர் ... வருகையை ஒழுங்குசெய்து கொண்டு இருந்தார்கள். இராணுவத்திருக்கு சவாலாக தொண்டர்கள் தங்கள் வேலைகளைச் செய்ய தொழிற் சங்க பிரசாரகர்கள் நேரத்துக்குநேரம் உற்சாகப் படுத்திக்கொண்டே இருந்தார்கள்.

மண்சரிவில் இறந்தவர்களுக்காக ஒரு அனுதாபக் கூட்டத்தை வெகுவிரைவில் டியநில்லை தோட்டத்திலேயே நடத்தவிருப்பதாக ... மாவட்டப் ... தெரிவித்துள்ளார்.

---

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**212-வது நாள்**

---

## இரங்கற்கூட்டம்.

மூதறிஞர் ராஜாஜியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து மாளிகாவத்தை 88/1ம் இலக்க இல்லத்தில் 30.12.72 மாலை 4 மணிக்கு அனுதாபக்கூட்டமொன்றை இலங்கை அ. தி. மு. க. நடத்துகிறது.

---

**வாழ்த்துக்கள்**

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள் பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பேரவையில் திரு. செல்லத்தம்பு—2.

# 'அஹிம்சைமுறை தோல்வியடைந்தால்

# தமிழ் இளைஞர்கள் புரட்சியில் இறங்குவர்!

## சமாதான முயற்சிகளுக்கான கடைசி வாய்ப்பு தந்தை செல்வாவின் தலைமையே!'

'எப்படியிருந்த போதிலும் தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்தியதற்காக இந்த அரசாங்கத்துக்கு நாம் நன்றி கூறத்தான் வேண்டும். தமிழ் பேசும் மக்கள் ஆட்சியாளர்களின் மேல் கொண்டுள்ள அதிருப்திதான் இன்று அவர்களை ஒன்றாக இணைத்துவிட்டிருக்கிறது. கடந்த 25 ஆண்டுகளாக பல்வேறு கட்சிகளாகப் பிரிந்து தங்களுக்குள் பிடுங்குப்பட்டுக்கொண்டிருந்த தமிழினத்தார், இன்று தமக்கு விழுந்துள்ள பலமான அடியை உணர்ந்து இந்நாட்டில் தங்கள் மொழியை, கலாசாரத் தனித்துவத்தைக் காப்பாற்றுவதற்கு ஒன்றாக திரண்டு விட்டார்கள்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் கழகம் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி போன்ற தமிழர்களின் கட்சிகளும், கட்சி சார்பற்ற பல்வேறு தமிழ்த் தலைவர்களும் ஒன்றாக இணைந்து, தமிழர் கூட்டணியை இன்று உருவாக்கியுள்ளார்கள்.

எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் ஐக்கிய இலங்கையர் சமுதாயம் ஒன்றுக்குஅடிக்கல் நாட்டும்படி பிரதமரிடம் நாம் கேட்டிருந்தோம். ஆனால் கடிதம் கிடைத்தது என்ற ஒரு பதிலைத் தவிர இந்தத் துறையில் பிரதமரிடமிருந்து நாம் எந்த விதமான மறுமொழியையும் இதுவரை பெற முடியவில்லை.

இந் நாட்டில் வாழும் 25இலட்சம் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை நீங்கள் பெறுவிட்டால்—இந் நாட்டுக்கு 75 வீதமான வெளிநாட்டுச் செலவாணியைத்தேடித் தரும் 10இலட்சம் மலையகத்தமிழர்களின் ஒத்துழைப்பை பெறுவீட்டா — இரண்டு மகாணங்களில் பெரும்பான்மையினராக வாழும் 15 இலட்சம் பூர்வீகத் தமிழர்களின் ஒத்துழைப்பை நீங்கள் பெறுவிட்டால் — இந் நாட்டில் ஒருபோதும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படப் போவதில்லை.

இந்த உண்மையை அரசாங்கம் இன்னும் உணராமலிருப்பது பரிதாபத்துக்குரியது. தமிழ் பேசும் மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல், தங்கள் சொந்த நலனுக்காக ஆட்சியாளருடன் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சில தமிழர்களைப் பயன்படுத்தி, தமிழ் இனம் முழுவதையும் தங்கள் பக்கம் திருப்பிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் அரசினர் இன்னும் இருக்கிறார்கள். இந்நாட்டில் ஒருபோதுமே நிறைவேற முடியாத கனவு அது!

இந்நாட்டில் சிங்களவர்களையும், தமிழர்களையும் நிரந்தரமாகப் பிரித்துவிடுகின்ற ஒரு கொள்கையை அரசாங்கம் பின்பற்றி வருகிறது ஆனால் நிலைமை இன்னும் மோசமாகிவிடவில்லை. தமிழ் இனத்துக்கு ஏற்பட்டுள்ள புண்ணை ஆற்றுவதற்கு அரசாங்கத்துக்கு இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது ... செய்வதற்காக ... அவர்களுக்கு வாய்ப்பு ... இருக்கிறோம்.

எங்கள் கட்சியினால், இந்தச் சபைக்கு கொண்டுவரப்பட்டு, தனது 'மனச்சாட்சி' காரணமாக எங்களை விட்டுப் பிரிந்த யாழ் பா. உ. (சி. எக்ஸ். மாட்டின்) சில நாட்களுக்கு முன் இச்சபையில் பேசும் போது, தமிழ் மக்களின் மனதில் அதிருப்தி வளர்வதாகவும், தமிழ் பிரதேசங்களில் காணப்படும்



பதட்ட நிலையைத் தீர்க்க முன்வருமாறும் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க துணிச்சலுடன் நடவடிக்கை எடுக்க முன்வருமானால், அது தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஐக்கியப்படுத்துவது மட்டுமல்ல—தமிழ் மக்களை அவர்கள் ஏற்கவே ஒற்றுமைப் படுத்திவிட்டார்கள் - ஐக்கிய இலங்கையர் சமுதாயத்துக்கும் அத்திவாரமிடப்பட்டதுமாகும்.

அதே வேளையில் அரசுக்கு எச்சரிக்கையாகவும் இதைக் கூறவிரும்புகிறேன் — தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இப்போது தீர்வு காணாதவிடத்தில் — எதிர்காலத்தில் அதற்குச் சந்தர்ப்பமே உங்களுக்கு கிடையாமல் போகலாம். காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகா கூறியதுபோல—'ஆறுகள் ஒரு போதும் பின்னோக்கி ஓடுவதில்லை.

சேர். அருணாசலம் மகாதேவா. திரு. நடேசபிள்ளை ஆகியோர் பின்பற்றிய கொள்கைகள் தோல்வியடைந்ததால், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் தமிழ் காங்கிரஸ் தோன்றியது தமிழ் காங்கிரஸ் பின்பற்றிய கொள்கைகள் தோல்வியடைந்த காரணத்தினால், தமிழரசுக்கட்சியும் தமிழர் கூட்டணியும் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் தோன்றியுள்ளன.

தமிழர் கூட்டணியின் முயற்சிகளும் தோல்வியடைந்தால், எத்தகைய சக்திகள் தமிழர் கூட்டணி வகித்த இடத்தை நிரப்பும் என்பதை எண்ணிப்பார்க்கவே அஞ்சுகிறேன். பிரிவினைக்குரல் பலமாகக் கேட்கத் தொடங்கிவிட்டது.

தமிழ் சத்தியாக்கிரகிகளுடன் பேசுவதற்குத் தாம் தயாரில்லை என்று இந்தச் சபையில் வெளி நாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் பேசியபோது நான் ... வருத்தமடைந்தேன்.

நான் அமைச்சருக்கு எச்சரிக்கை விடுகிறேன் -தந்தை செல்வநாயகம்தலைமையில் இயங்கும் தமிழ் சத்தியாக்கிரகிகளுடன் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள அவர் தயாராகஇல்லையென்றால்—வேறு தலைமையின் கீழ் தமிழ் பயங்கரவாதிகளுடனும் புரட்சியாளர்களுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்த வேண்டி நேரிடலாம். இந்தத் தமிழ் புரட்சியாளர்கள், 1971ம் ஆண்டு கலவரம் செய்த சிங்கள பயங்கரவாதிகளைப் போலன்றி, அமைச்சருடன் சமாதானம் பேசுவதற்கே மறுத்துவிடலாம்! தமிழ் இனத்தினருக்கு இன்றுள்ள மனநிலை இதுதான்!

நீங்கள் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியை அழிப்பதில் ஒருவேளை வெற்றி பெறலாம் — ஆனால் ஒரு இனத்தை அழிப்பதில் ஒருபோதுமே வெற்றிபெற முடியாது! இதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகமிருந்தால் தயவுசெய்து சரித்திரத்தை புரட்டிப் பாருங்கள்!

இந்நாட்டின் பொருளாதார நோய்களுக்கு எல்லாம் முந்திய அரசாங்கமே காரணம் என்று ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். அது எப்படியிருந்தாலும், இந்த அரசாங்கம் பின்பற்றும், உள்நாட்டுவெளிநாட்டுக்கொள்கைகளே பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று நான் கூறுகிறேன்' வெளிநாட்டுக் கொள்கை, வர்த்தகக் கொள்கை உள்நாட்டு கொள்கை-இந்த மூன்றுமே காரணங்களாகும்.

இந்த அரசு பதவிக்குவந்த பின்னர், செய்த ஒரு காரியம், இஸ்ரேலுடனான எமது இராசரீகத் தொடர்புகளை துண்டித்துக்கொண்டதாகும். இதனால் இந்த நாட்டுக்கு என்ன நன்மை ஏற்பட்டது என்று கேட்க விரும்புகிறேன். ஐக்கிய அரபு குடியரசுக்கு ஆயுத உதவி அளித்துவரும் ரஷ்யாகூட இஸ்ரேலுடனான தொடர்பை அறுக்காதபோது இலங்கை ஏன் அறுத்துக்கொள்ள வேண்டும்?

இஸ்ரேல் எங்கள் நாட்டைப் போன்றதோர் சிறிய நாடு. எங்கள் நாட்டுக்கு உதவ இஸ்ரேல் முன்வந்தது. புத்தளம் மாவட்டத்திலிருந்து, மன்னார் மாவட்டத்துக்கூடாக, யாழ் மாவட்டத்திலுள்ள பரந்தன் வரையுள்ள வரண்ட பிரதேசங்களில் தண்ணீர் எடுப்பது பற்றி ஆராய இலங்கை அரசின் அழைப்பின்பேரில் இஸ்ரேல் நிபுணர்கள் இங்குவந்து ஆராய்ச்சி நடத்தினார்கள். இன்னும் சிலகாலம் அவர்களை இங்கு இருக்கவிட்டிருந்தால் அந்த வரண்ட நிலப்பகுதி ... கண்டுபிடித்திருப்பார்கள்.

முன்னூறு சதுரமைலுக்குள் ஏழு லட்சம் மக்கள் வாழும் யாழ்ப்பாணக்குடாநாட்டில் நீர்வளம் பற்றி ஆராய்ந்த ஸ்ரேலிய நிபுணர்கள் நிலத்திலிருந்து அதிகநீர் வெளியே எடுக்கப்படுவதாகவும் வெளியே எடுக்கப்படும் நீரின் அளவு மழைமூலம் நிலத்தில் சேமிக்கப்படுவதில்லை என்னும் இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் யாழ்குடாநாடு ஒரு பாலைவனமாக மாறிவிடும் என்றும் அறிக்கை விடுத்தனர். அதுபற்றி இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இஸ்ரேலியர்கள் எங்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவதற்கு இந்த அறிக்கைதான் காரணமோ என்றும் சிலர் யோசிக்கிறார்கள். ஆனாலும் நான் அப்படி நினைக்கவில்லை.

மாணிக்கக்கல் வியாபாரத்தில் கடந்த மூன்றாண்டு காலமாக இந்த நாடு கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்துவிட்டது. இதற்கு காரணம் உலகச்சந்தையில் மாணிக்கக்கல் வியாபாரத்தில் யூதர்களின் செல்வாக்கு அதிமுக்கியமாக இருப்பதுதான்.

கடந்த இரண்டாண்டு காலமாக இலங்கைத் தேயிலையை வாங்குவதை பிரிட்டன் குறைத்துவருகிறது. இலங்கையைவிடக் கூடுதலான தேயிலையை இந்தியாவிடமிருந்து பிரிட்டன் பெற்றுக்கொள்வதாக இச்சபையில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினார். பிரிட்டனில் உள்ள தேயிலை விநியோக உரிமை யூதர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

வடகொரியாவுடன் 1970 ஆண்டு இராஜரீகத் தொடர்புகளை ஏற்படுத்திய நாம் 1971ல் அதைத் துண்டித்துக்கொண்டோம். இந்நாட்டில் நிகழ்ந்த பயங்கரவாதச் சம்பவங்களுக்கும் வடகொரிய தூதரகத்துக்கும் தொடர்பு இருப்பதாக அப்போது கருதப்பட்டது.

இப்பொழுது மீண்டும்வடகொரியாவுடன் தொடர்பு ஏற்படுத்த முயற்சி நடப்பதாக கூறப்படுகிறது. வடகொரிய தூதரகத்தை மீண்டும் திறக்க அனுமதிக்கமுடியுமானால் இஸ்ரேலிய தூதரகத்தையும் இங்கு திறப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### எமது இலட்சியம்!

"பயிற்சியும்-தேர்ச்சியும் திறமையும் கொண்ட இலங்கையர்கள் இலங்கையை விட்டுச் செல்கின்றனர். இவர்களுக்கு இங்கு போதிய வேலை வாய்ப்பு இல்லாமையும், ஊதிய வசதியின்மையுமே அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்லக் காரணமாகும்.

தற்சமயம் இங்கிலாந்தில் 17 ஆயிரம் இலங்கையர்கள் இருக்கின்றனர். அவர்களில் 14 ஆயிரம் பேர் தமிழர்கள். இவ்வளவு தொகையான தமிழர்கள் அங்கு குடியேறக் காரணமென்ன? அவர்களுக்கு விரக்தியும், வேதனையும் இருப்பதாலேயே நாட்டை விட்டே வெளியேறுகின்றனர். நாட்டின் பொதுநலன் கருதி இவர்கள் விரக்தியை அரசு அகற்றவேண்டும். வேதனையைப் போக்க வேண்டும்.

"நாம் அரசாங்கத்துடன் எமது உரிமைகளுக்காக போராடுகிறோம். உரிமை கிடைக்கும்வரை போராடியே தீருவோம். ஆனால் எமது கட்சி நாட்டின் பொது நலனுக்கும், அபிவிருத்திக்கும் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்க்கவில்லை. முடிந்த அளவு முழு முயற்சியுடன் நாம் பொருளாதாரத் திட்டங்களின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்புத்தர பின் நிற்கவில்லை.

எமது இறுதி இலட்சியம் வறுமையற்ற, வளம் பலபெற்ற சம உரிமை கொண்ட ஐக்கிய இனம் ஒன்றை தமிழ் தேசிய இனம் ஒன்றை உருவாக்குவது தான். இதனை நிறைவேற்றும் பணியில் நாம் முனைந்துள்ளோம்.

அரசாங்கமும் தமிழர்களின் விரக்தியை, வேதனையை போக்க தயக்கமின்றி முன்வர வேண்டும்."

—தேசிய அரச பேரவையில் திரு. சே. மா. செல்லத்தம்பு.

### சனசமூக நிலைய வெள்ளிவிழா!

குப்பிழான் விக்கிலேஸ்வரா சனசமூக நிலைய வெள்ளிவிழா நிதிக்காக இம்மாதம் 30ம் தேதி மேற்படி நிலைய திறந்த வெளியரங்கில் வட்டு-கிழக்கு விநாயகா நாடக மன்றத்தாரின் 'மகுடமா மானமா' எனும் நாடகமும் அங்காளை கலையகம் நாடகமன்றத்தாரின் 'நட்புக்காக' என்னும் நாடகமும் நடைபெறும்.

மறுநாள் 31ம் தேதி 25 ஆவது ஆண்டு பூர்த்தியடைவதையொட்டி வெள்ளி விழாவை சிறப்பாகக் கொண்டாட குப்பிழான மக்கள் முன்வந்துள்ளார்கள். அன்றைய தினம் முன்னாள் உபசபாநாயகர் திரு. சிவசிதம்பரம் உட்பட பல்வேறு பிரமுகர்கள் விழாவிலே பங்கு பற்றி உரை நிகழ்த்துவார்கள். கலை நிகழ்ச்சிகளும். இடம் பெறும்.

### செல்வாவுக்கு வரவேற்பு!

புத்தூர் கிராமசபையும் 27 சனசமூக நிலையங்களுமாகச் சேர்ந்து 21-12-72ல் தந்தை செல்வாவுக்கு அளிக்கவிருந்த வரவேற்பு விழா கடுமழை காரணமாக 11-1-73க்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் கி. ச. முன்னுள் தலைவர் அருளம்பலம் சபைக்கு செலுத்த வேண்டிய பணம் ரூ. 17,176.

## அதை அறவிடச் சபை முயலுகிறது! அம்முயற்சியைத் தடுக்கத் திட்டமா?

## அமைச்சிடம் அருணுசலம் கேள்வி!

கொக்குவில் கிராமசபையை நிர்வாகச் சீர்கேடு என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏன் கலைக்கக்கூடாது என்று கேட்டு உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சு கொக்குவில் கிராம சபையினருக்கு எழுதியிருந்த கடிதத்துக்கு கிராமசபை உறுப்பினர்கள் கூட்டாகவும் முதலாம் வட்டார உறுப்பினர் திரு. ந. அருணுசலம் தனியாகவும் கடிதமூலம் பதிலளித்துள்ளனர்.

திரு. அருணுசலம் அளித்துள்ள பதிலில் குறிப்பிட்டுள்ள சில பகுதிகள் வருமாறு:-

கடந்த 1964ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை தொடர்ந்து, நான் இச்சபையின் ஓர் அங்கத்தவனுக இருந்துவருகின்றேன். கடந்த 1967ம் ஆண்டு இறுதியில் முன்னைய எமது கிராமசபைத் தலைவராகிய, இந்நாள் தேசிய பேரவை உறுப்பினர் (நல்லூர் தொகுதி) திரு. சி. அருளம்பலம் அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யாத காரணத்திஞல், கிராமசபைச் சட்டத்தின் 54ம் பிரிவின் பிரகாரம் தேசிய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சு அன்னுரைப் பதவி நீக்கஞ் செய்தது. அப்பொழுது சபை உறுப்பினர்களுக்கு எந்தவிதமான குற்றப் பத்திரமும் அனுப்பிவைக்கப்படவில்லை.

ஆனல் தற்பொழுது உள்ளூராட்சி அமைச்சு எமது கிராமசபையை ஏன் கலைக்கக்கூடாதெனச் சகல உறுப்பினர்களிடமிருந்தும் விளக்கங் கோரியுள்ளது. இதனல் உறுப்பினர்கள் மாத்திரமல்ல, வரியிறுப்பாளர்களும் மிகவும் பரபரப்படைந்துள்ளனர். காரணம் முன்னைய நிர்வாகங்களிலும் பார்க்க தற்போதைய எமது கிராமசபையின் நிர்வாகம் சகல துறைகளிலும் திருப்திகரமாகச் சேவையாற்றி வரும் இந்தக் கட்டத்தில் ஏன் இப்படி அபாண்டமான குற்றச்சாட்டை அமைச்சு இந்த நிர்வாகத்திடம் சுமத்த வேண்டும் என மக்கள் கேட்கின்றூர்கள்.

சபையின் முன்னுள் தலைவரும், இந்நாள் நல்லூர் தொகுதிப் பேரவை உறுப்பினருமாகிய திரு. சி. அருளம்பலம் அவர்கள் ஏறத்தாழ பல வருடங்கள் இச்சபையில் தலைவராகத் தொடர்ச்சியாக இருந்திருக்கின்றூர். அவரது காலத்தில் 1956 ஆண்டு எமது கிராமத்திற்கு மின்சார விநியோகஞ் செய்யும் பொருட்டு இறைமதிப்பு வரித் திட்டத்தை எமது கிராமத்தில் அங்குரார்ப்பணஞ் செய்துவைத்தார். இதனைத் தழுவி அரசினர் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிலையத்திலிருந்து நான்கு தடவைகள் மின்சாரத் திட்டத்தை அமுல்படுத்த பெருந்தொகைப் பணத்தைக் கடனுகப் பெற்ருர்.

நான் அறிந்த அளவில் இறுதியாகப் பெற்ற கடன் தொகை, உரிய நோக்கத்தை நிறைவேற்ருது வருடாந்தக் கொடுப்பனவுக்கே பயன்படுத்தப்பட்டதாக அறிகின்றேன். 1961ம் ஆண்டு கடன்பெற்ற பின் அவர் 1967ம் ஆண்டு பதவி நீங்கிச் சென்ருரேயல்லாது ஆண்டுதோறும் கடன் பகுதிப் பணத்தை ஏறத்தாழ 7 ஆண்டுகளாகச் செலுத்தவில்லை, அதுமட்டுமல்லாது பின்வரும் செலவினங்களைச் செய்வதற்கும், அதற்கென்று உரிய பணங்கள் சபையிடம் முன் கொடுக்கப்பட்டும் தலைவர் உரிய நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்தாது வேறு வழியில் பணத்தைச் செலவுசெய்துவிட்டார்.

### அவையாவன:

1. பல வருட காலமாக மாதாந்தம் ஊழியர்களிடம் கழிக்கப்பட்டு வந்த ஊழியர் சேமலாப நிதி உரிய இலாகாவிற்கு அனுப்பப்படவில்லை.

2. இராமசபையின் பகிரங்கப் பொது வேலைகளுக்கு நன்கொடையாக அரசினரால் கொடுக்கப்பட்ட பணத்தில் ரூபா 38,000/ம் பெறுமதியான வேலைகள் செய்யப்படவில்லை. மேற்படி வேலைகளைச் செய்து முடிக்கவும் கொடுப்பனவுகள் கொடுக்கவும் உரிய பணம் இருப்பில் இருக்கவில்லை.

தற்போதைய நிர்வாகம் 1968ம் ஆண்டு பிற்பகுதியில் ஆட்சிக்கு வந்த பின் நான் அறிந்தவரையில் நான்கு வருடத்திலும், மூன்ருண்டுக் கடன் கொடுப்பனவுகளைச் செய்ததுடன், ஊழியர் சேமலாபநிதிக்குக் கட்ட வேண்டிய பணத்தை உடன் அனுப்பி வைத்தும் ரூபா 38,000க்குச் செய்யப்பட வேண்டிய வேலைகளையும் செய்து முடித்துள்ளதனையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

பழைய பாக்கிகளை அறவிடுவதில் தற்போதைய நிர்வாகம் பாரபட்சம் காட்டியது கிடையாது. ஆனல் முந்நாள் சபையின் தலைவரும் இந்நாள் தேசிய பேரவை நல்லூர் தொகுதி உறுப்பினருமான திரு சி. அருளம்பலம் அவர்கள் 1952ம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்ற உறுப்பினராக வரத் தேர்தலில் நின்று தோல்வி கண்டவர். தான் பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் என்பதற்காக வரி வசூலிப்பதில் கவலையீனமாக நடந்து கொண்டார் ஆனல் தற்போதைய நிர்வாகம் திரு. சி. அருளம்பலம் அவர்கள் தேசிய பேரவை உறுப்பினராக இருந்தும் அன்னுரால் சபைக்குச் செலுத்த வேண்டியுள்ள பணம் ரூபா 17, 176/11 யும் கூட அறவிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இவ்வேளை ஏன் சபையைக் கலைக்கக்கூடாது என நீங்கள் கேட்பது விசித்திரமாக இருக்கின்றது. இது அவரது அறவிட்டு முயற்சியைத் தடுக்கவா?

கடந்த நான்கு ஆண்டு காலமும் நல்ல முறையில் செயற்பட்டுவந்த இந்த நிர்வாகத்தைப் பார்த்து, அரசினர் மேலும் ஒரு வருட காலம் சபையை நடாத்த அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் எமது விருப்பப்படி எமது பதவிகளை இராஜினுமாச் செய்துவிட்டுப் போஞல் நீங்கள் இப்படியான கேள்விகளை எம்மைக் கேட்கவேண்டிய ஏற்படாது. ஆனல் கிராமத்தை நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திஞல் சபை நிர்வாகத்தை 1968க்கு முன் இருந்த நிர்வாகத்தைப் போல் இல்லாது தடுக்கவும் நாங்கள் உண்மையைக் கூறப் பின் நிற்கமாட்டோம் என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இச்சபையைச் சீர்படுத்த தற்போதைய நிர்வாக சகல அங்கத்தவர்களினது ஒத்துழைப்புடனும் எடுத்து வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஒரு விசேட ஆணையாளரால் கூட எடுப்பது அசாத்தியமென நினைக்கின்றேன்.

அரசினரிடமிருந்து இச்சபையின் முன்னைய நிர்வாகம் பெற்ற கடனைச் செலுத்திக் கொண்டிருக்கும் உறுப்பினர்களாகிய எங்களைப் பார்த்து நிர்வாகச் சீர்கேடுக்கும், கடமையை அலட்சியஞ் செய்தது எனவும் எம்மிடம் விளக்கங் கேட்பதனை நாம் ஏற்க முடியாது.

எனவே கடமை உணர்ச்சியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் உறுப்பினர்களாகிய எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறு பரிசிலனை செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் கூட்டணியின் தீர்மானமே — நாவலர் விழாவைப் பகிஷ்கரிப்பதல்ல!

இந்த முடிவை ஒரு கிறிஸ்தவரான நேசையா தலைமையில் எடுத்துவிட்டதாகவும், இந்து மதப்பிரச்சினை சம்பந்தமாக கிறிஸ்தவரா முடிவெடுப்பது என்றும் பயங்கரமான முறையில் மதப்பிரச்சினையைக் கிளப்பி — மத வேறு பாட்டைக்கிளற தினபதியும் வேறு சில தமிழ்த் துரோகிகளும் முயலுகிறுர்கள்!

இப்படிக் கூறுபவர்கள் தான் — தங்கள் அதே வாயால் நாவலரை மத, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட தேசிய வீரர் என்றும் வேறுவர்ணிக்கிறுர்கள்!

## தமிழ்ப் பகைவர்..

நாவலர் விழாவைப் பகிஷ்கரிக்கின்ற முடிவு அல்ல — அமைச்சர்களின் தமிழ் இலங்கை விஜயத்தைஎதிர்க்கின்ற முடிவுதான் திரு. கே. நேசையா தலைமையில் தமிழர் கூட்டணியால் எடுக்கப்பட்டது.

அதுவும் திரு. நேசையா, ஒரு கிறிஸ்தவர் என்றமுறையில் அல்ல—தமிழர் என்ற முறையில்தான் தலைமை தாங்கினூர். இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் திருவாளர்கள் கதிரவேற்பிள்ளை, பண்டிதர் இரத்தினம் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், ஜெயக்கொடி வி. என். நவரத்தினம் ஆனந்தசங்கரி போன்றவர்கள் (இவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை மக்கள் அறிவார்கள்)

அமைச்சர்களை எதிர்ப்பதுதான் நோக்கம் என்ருல், இதற்கு முன் வந்த அமைச்சர்களை ஏன் எதிர்க்கவில்லையென்று ஒரு குதர்க்கம் எழுப்பப்பட்டுள்ளது.

ஏன் எதிர்க்கவில்லையென்ருல், மே 22-ம் திகதி குடியரசு அரசியல் சட்டம்வந்த பின்னர் வட பகுதிக்கு எந்தவொரு அமைச்சரும் வராததினுல்.

குடியரசு அரசியல்சட்டம் வந்தபின்னர், அமைச்சர் குமாரசூரியர்தான் ஒரேயொரு தடவை — இரகசியமாக வந்து—பளுளாயில் ஒரு கோயிலில் கதவைப் பூட்டிவிட்டு பொலீஸ் காவலுடன் சாமி கும்பிட்டுவிட்டுப் போஞரே தவிர வேறு எந்த அமைச்சர்களும் உத்தியோக ரீதியில் வடக்கே வரவில்லை!

எனவே தமிழினமே! எச்சரிக்கை! எச்சரிக்கை! மீண்டும் மத வேறுபாடுகளை கிளப்பி — தமிழ் மக்களை இந்து இஸ்லாமியர்—கிறிஸ்தவர் என்று பிளவுபடுத்திட எதிரிகள் மீண்டும் முனைகிருர்கள்!

தமிழ்ப் பகைவர்கள் வாயைப் பிளந்துகொண்டு காத்துக்கிடக்கிருர்கள்!

தமிழ் மக்களே! உஷார்! தமிழ்ப் பகைவர்கள் விரிக்கின்ற வலையில் விழுந்துவிடாதீர்கள்!

அவர்களை இனம்கண்டு ஒதுக்கி விடுங்கள்!

— எஸ். ஆர். எம்.

---

# தாய்மொழியே போதனமொழி என்பது அரசியல்சட்டத்தில் இடம்பெறவேண்டும்!

## பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் கருத்து!

தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் மொழியே போதனமொழியாக இருக்க வேண்டும் என்பது அரசியல் திட்டத்திலே இடம்பெற வேண்டும். நமது கல்வி முறைக்குப் புத்துயிர் அளிப்பது தாய்மொழிக் கல்வி என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

இவ்வாறு சென்னைக்கம் இராமநாதன் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்திய இலங்கைப் பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் திரு. ப. சந்திரசேகரம் கூறினூர்.

அவர் மேலும் கூறியதாவது:—

"புதிய கல்வித் திட்டம் பல முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது. ஆரும் வகுப்பில் இருந்து ஒவ்வொரு மாணவனும் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகக் கற்க வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க அம்சமாக உள்ளது.

ஆனல் அதே நேரத்தில் இத்திட்டம் தாய்மொழியே போதனமொழியாக இருக்கவேண்டும் என்ற உரிமையை மறுக்கிறது. இத்திட்டத்தின் பிரகாரம் கல்வி மொழி என்பது சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளுள் ஒன்றும் கட்டாய பாடங்களாகும்.

கல்வி அமைச்சின் வெளியீட்டில் "எந்த நாட்டிலும் சிறுபான்மையினரின் மொழி பெரும்பான்மையோரின் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது என்பதனை நாம் அறியோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்து சரியானதல்ல.

சுவிற்சலாந்தில் நான்கு தேசிய மொழிகளும் மூன்று உத்தியோக மொழிகளும் உண்டு. இங்கு பெரும்பான்மையினர் சிறுபான்மையோரின் மொழியை கண்டிப்பாகக் கற்க வேண்டும் என்ற நிபந்தனை உண்டு.

தாய் மொழிக் கல்வி என்பது நமது கல்வி அமைப்பில் அடிக்கடி மாற்றம் பெறுகிறது. இச் சொல் முதல் மொழி என்றும் இன்று கல்வி மொழியாக மாறிவிட்டது. இது தாய் மொழிக் கல்வி என்ற பொருளைத் தரமாட்டா. இது தாய்மொழி கல்விக் கொள்கைக்கு முற்றிலும் [illegible] அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டும்.

---

## தமிழ்

பண்டிதர் கந்தையா (வவுனியா)

தமிழையறியாரோ மந்திரிமார்
தமிழ்ச்சிலர் நன்கறிந்தும்
தமிழுக்கும் தமதிறகும் பேதமறியாரோ
தமிழின் சுவையறிந்தார் தமிழை மறவாரே.

தமிழைத் தரணியின் முதுமொழியென்பர்
தமிழின ஆய்ந்த ஆய்வறிவாளர்
தமிழினை உலகிற்கொருமொழியென்றும்
தமிழ்ப்பதிவுப் பெருமதிப்பென்பர்.

தமிழை நறுமலர்த்தேன் என்பர்
அமிழ்தம் என்பர் அரிவையரிதழ் சுவைத்தார்
கன்னல்சுழியிடை யூறியசாறென்பர்
இன்னிசையில் தமிழோசை செவிமடுத்தார்.

தமிழை மழலைமொழியென்பர்
குழந்தைச் சுவையாய் மொழிகேட்டோர்
தமிழைக் காதலுக்கோர் மொழியென்பர்
தமிழ் இசையில் காதல் கசக்குமென்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைமத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


3 வது வெற்றி மாதம்

வெள்ளி விழா சித்திரம்

சென்ட்ரல் (மருதானை) ஜோதி (திருமலை) ராணி (யாழ்ப்பாணம்)

- சிவாஜி கணேசன்
- ஜெயலலிதா
- மனோரமா
- எம். ஆர். ஆர். வாசு
- வீ. கே. ராமசாமி, சுபா நடித்த



# பட்டிக்காடா பட்டணமா

டைரக்ஷன்: பி. மாதவன் பாடல்கள்: கண்ணதாசன் இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

உத்தரவின்றி உள்ளே வா
என விரைவில்
அழைக்க காத்திருக்கிறார் ஸ்ரீதர்

5 வது வாரம்

# செல்லமகால்
(கொட்டாஞ்சேனை)

இம்பீரியல் (மட்டுநகர்) வின்சர் (யாழ்நகர்)

ஏ. வி. எம். ராஜன், முத்துராமன், வி. நாகையா, நாகேஷ், எஸ். வி. ரங்கராவ், எஸ். வி. சுப்பையா, வாணிஸ்ரீ (இரு வேடங்களில்)

—நடித்த—




10 வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்நகர்)
விஜயா (மட்டுநகர்)

சிவாஜிகணேசன், பத்மினி, நம்பியார், வாணிஸ்ரீ, நாகேஷ், ஜெய்சங்கர், சகுந்தலா.

—நடித்த—

ஆஸம் ஆர்ட்ஸ்



# குலமா குணமா

திரைக்கதை-வசனம்-டைரக்ஷன்
K.S.கோபாலகிருஷ்ணன்

வெகு விரைவில்
வருகிறது

ஜெய்சங்கர் லட்சுமி

நடிக்கும்

மாடன் தியேட்டர்ஸ்

# கருந்தேள் கண்ணாயிரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ... கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1972ம் வருடம் டிசம்பர் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது